விலை ரூபா: 15.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 பங்குனி 24 திங்கட்கிழமை (06.04.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 108

SATS-TECH ENGINEERS



NEW PACKAGES & RENEWAL
CALL:- 222 5908 / 222 8812

# புதுக்குடியிருப்புப் பிரதேசம் படையினரின் கட்டுப்பாட்டில்!



## இராணுவப் பேச்சாளர் அறிவிப்பு

(கொழும்பு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேசத்தினை கடுமையான மோதல்களுக்குப் பின்னர் நேற்று ஞாயிற்றுக்கிழமை இராணுவத்தினர் முழுமையாக கைப்பற்றியிருப்பதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்தார். கடந்த மூன்று நாட்கள் இடம்பெற்ற கடுமையான மோதல்களின் பின்னர் முன்னேறிச் செல்லும் இராணுவ அணிகள் புதுக்குடியிருப்பினை கைப்பற்றியிருப்பதாகவும் புலிகள் தரப்பில் பலத்த ஆளணி இழப்புக்கள் ஏற்பட்டிருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## பொலிஸ் அதிகாரி சுட்டுக்கொலை

மட்டக்களப்பு கல்லடி பொலிஸ் பயிற்சிக் கல்லூரிப் பணிப்பாளரும் பொலிஸ் சுப்பிரிண்டருமான எம்.ஜமால்தீன் நேற்று அடையாளம் தெரியாத ஆயுதக் குழு ஒன்றினால் கல்முனையில் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

மருதமுனையில் உள்ள பள்ளிவாசல் ஒன்றுக்கு தொழுகைக்காக சென்றுவிட்டு திரும்பிக்கொண்டிருந்த போதே நேற்று இரவு 7.30 மணியளவில் அவரை இடைமறித்த ஆயுதக்குழுவொன்று சுட்டுக்கொன்றுவிட்டு தப்பிச் சென்றுவிட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன. (ச-5)

## சீனா, இந்தியாவிடமிருந்து கடன் பெற அரசு தீர்மானம்

(கொழும்பு)

பொருளாதார நெருக்கடியை சமாளிப்பதற்கு சர்வதேச நாணய நிதியத்திடம் கோரிய 1.9 பில்லியன் அமெரிக்க டொலர் கடன் உதவி கிடைப்பதில் தாமதம் ஏற்பட்டிருப்பதால் இந்தியா மற்றும் சீனா ஆகிய நாடுகளிடம் கடன் கேட்பதற்கு இலங்கை அரசு தீர்மானித்திருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்தியா மற்றும் சீனா ஆகிய நாடுகளிலிருந்து மொத்தமாக 500 மில்லியன் அமெரிக்க டொலர் கடன் உதவி இலங்கைக்கு வழங்கப்பட்டிருப்பதாக தெரிய வருகிறது.

இந்தியத் தரப்பினருடனான பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்காக இலங்கை அதிகாரிகள் குழுவென்று புதுடில்லியில் தங்கியிருப்பதுடன் சிறிலங்கா சுதந்திரகட்சியின் பொதுச் செயலாளர் அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தலைமையிலான குழுவொன்று நேற்று சீனா புறப்பட்டுச் சென்றது.

கடன் வழங்குமாறு கோரிக்கை விடுக்கும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் விசேட கடிதமொன்றையும் சீனா செல்லும் குழுவினர் கொண்டு சென்றுள்ளதாக கூறப்படுகிறது.

உலகளாவிய (12ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.இந்துக்கல்லூரியில் 5 மாணவர்கள் 9 ஏ சித்தி

(யாழ்ப்பாணம்)

க.பொ.த. சா/தர பரீட்சைப் பெறுபேற்றின் அடிப்படையில் யாழ்.இந்துக் கல்லூரி 5 மாணவர்கள் 9 ஏ சித்தி பெற்றுள்ளனர். 8 ஏயினை 21 மாணவர்களும் 7 ஏயினை 25 மாணவர்களும் 6 ஏ 33 மாணவர்களும் 5 ஏ 30 மாணவர்களும் பெற்றுள்ளனர்.

2008ஆம் ஆண்டு க.பொ.த. சா/த பரீட்சையில் யாழ்.இந்துக் கல்லூரியில் தமிழ் மொழி மூலம் (12 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையில் சில தினங்களுள் போர் நிறுத்தம் ஏற்படலாம்?

### இந்திய ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

இலங்கையில் மனிதாபிமானப் போர் நிறுத்தமொன்று ஒரு சில தினங்களில் அமுல் படுத்தப்படலாம் என இந்திய ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

விடுதலைப்புலிகளின் பலமாக கருதப்பட்ட புதுக்குடியிருப்புப் பகுதியை முழுமையாகக் கைப்பற்றியுள்ளதாக இலங்கை இராணுவம் அறிவித்துள்ளது.

இந்நிலையில் (12ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியாவின் நடவடிக்கைகள் ஏமாற்றத்தை அளிக்கிறது

### விடுதலைப் புலிகள் தெரிவிப்பு

(புதுடில்லி)

இந்தியாவின் நடவடிக்கைகள் ஏமாற்றத்தை அளிப்பதாக விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர். ஆங்கிலத் தொலைக்காட்சி நிறுவனமொன்றுக்கு விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் அளித்துள்ள பேட்டியில் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் கூறியதாவது,

இந்திய அரசு விடுதலைப் புலிகளை எதிரிகளாக (12ஆம் பக்கம் பார்க்க)

## கப்பல் சேவை இன்று இடம்பெறும்

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறைக்கும் திருகோணமலைக்கும் இடையிலான கப்பல் சேவை இன்று இடம்பெறும் என யாழ்.இராணுவ சிவில் நிர்வாகக்காரியாலய இணைப்பாளர் மேஜர் அருணசிறி தெரிவித்தார். கப்பல் பிரயாணத்தை மேற்கொள்ளவுள்ளவர்கள் இன்று காலை யாழ்.புகையிரத முன்றலில் கூடுமாறும் அவர் தெரிவித்தார். (ச-5)

## 30 சிறுவர்கள் உட்பட 92 பொதுமக்கள் நேற்றைய தாக்குதல்களில் உயிரிழப்பு

(வவுனியா)

வன்னியில் நேற்று நடத்தப்பட்ட எறிகணை மற்றும் எம்.ஐ.-24 ரக உலங்கு வானூர்தித்தாக்குதல்களில் 30 சிறுவர்கள் உட்பட 92 தமிழர்கள் உயிரிழந்துள்ளதுடன் 153 பேர் படு காயமடைந்துள்ளனர் என வன்னித் தகவல்களை மேற்கோள் காட்டி செய்திகள் வெளியாகியுள்ளன.

மக்கள் பாதுகாப்பு வலயப் பகுதிகளான அம்பலவன் பொக்கணை, இடைக்காடு, மாத்தளன் மற்றும் இரட்டை வாய்க்கால் பகுதிகளில் நேற்றுக்காலை தொடக்கம் மாலை வரை ஆட்லறி எறிகணை, பல்குழல் வெடிகணை, பீரங்கி, மோட்டார், ஆர்.ஜி.பி. உந்துகணை மற்றும் எம்.ஐ.-24 ரக உலங்கு வானூர்தித் தாக்குதல்கள் என்பன இடம்பெற்றுள்ளன.

இதில் 30 சிறுவர்கள் உட்பட 92 பொதுமக்கள் உயிரிழந் (12ஆம் பக்கம் பார்க்க)

மிதிவெடி அகற்றல் செயற்பாடுகளுக்கு
பூரண ஒத்துழைப்பு வழங்குவோம்
சர்வோதயம்
யுனிசெப்
(C-2271)

# மக்கள் பாதுகாப்பு வலயம் இறுதிச் சமருக்கான களம்

விடுதலைப் புலிகளுக்கு எதிரான சமரின் இறுதிக் கட்டத்துக்கு வந்திருப்பதாக படைத்தரப்பு கூறுகிறது.

இதுவரை புதுக்குடியிருப்பு நகரின் கிழக்கு மற்றும் வடகிழக்குப் பகுதிகளில் இடம்பெற்று வந்த சமர்- இப்போது பொதுமக்கள் பாதுகாப்பு வலயத்தை நெருங்கியிருக்கின்றது.

பாதுகாப்பு வலயத்துக்கு வெளியே, புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த கடைசிப் பிரதேசத்தையும், கடந்த புதன்கிழமை அரசபடையினர் கைப்பற்றியதை அடுத்தே சண்டைக் களம் சற்று இடம் மாறத் தொடங்கியிருக்கிறது.

புதுக்குடியிருப்புச் சமர் மிக மோசமானதாகவும் படையினரால் விரைவாக முன்னேற முடியாததாகவும் இருந்து வந்தது.

இதற்கு முன்னர் புலிகள் நடத்திய வழிமறிப்புச் சமர்கள் எல்லாவற்றை யும் விட இது மூர்க்கம் நிறைந்ததாக இருந்தது.

காரணம், இது அவர்களின் கடைசிக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தைத் தக்க வைப்பதற்கான- வாழ்வா- சாவா என்ற நிலையிலானதொரு சமராகவே இருந்தமையாகும்.

இதனால் படையினர் இரணைப்பாலை, ஆனந்தபுரம் போன்ற புதுக்குடியிருப்பின் சில பகுதிகளைக் கைப்பற்ற பலநாட்களாகத் தொடர்ந்து கடுமையாக சண்டையிட நேரிட்டது.

இந்தச் சமரில் புதுக்குடியிருப்பின் பெரும்பாலான வளங்கள் அழிக்கப்பட்டு விட்டன. மிகக் கோரமான ஷெல் தாக்குதல்கள், விமானத் தாக்குதல்களில் வீடுகள், கட்டடங்கள், மரங்கள் பெரும்பாலானவை நாசமாகிப் போக வெறும் சுடுகாடாகக் கிடந்த பிரதேசத்தையே படையினர் கைப்பற்றியிருக்கின்றனர். போர் இறுதிக் கட்டத்தை அடைந்து விட்ட நிலையிலும், கடுமையாகப் போரிட்டு வந்த புலிகளை-புதிய தந்திரோபாயத்தின் அடிப்படையில் மடக்குவதற்குப் படைதரப்பு கடந்தவாரம் முயற்சியொன்றை மேற்கொண்டிருந்தது.

விடுதலைப் புலிகளின் முக்கிய தளபதிகள் சிலரை 'உயிரோடு பிடிக்கும் திட்டம் அது.

படைத்தரப்பு மிக இரகசியமாக இந்தத் தாக்குதல் திட்டத்தை நடை முறைப்படுத்திய போதும் அவர்கள் தப்பிவிட்டனர்.

புதுக்குடியிருப்பு மற்றும் இரணைப்பாலைக் களமுனையில் புலிகளின் அணிகளை வழிநடத்திக் கொண்டிருந்த புலிகளின் மூத்த தளபதி கேணல் பானுவையும், மற்றொரு தளபதி லோறன்ஸ் மற்றும் சிலரையும் பிடிப்பதே படைத்தரப்பின் திட்டமாக இருந்ததாக கூறப்படுகிறது.

இவர்கள் பச்சைப்புல்மோட்டைச் சந்தி இரணைப்பாலை கிழக்கு, ஆனந்தபுரம் பகுதிகளில் இருந்த புலிகளின் அணிகளைக் கொண்டு கடந்த சில வாரங்களாகப் படையினர் மீது கடுமையான தாக்குதல்களை நடத்திவந்தனர்.

அவ்வப்போது ஊடறுப்புத் தாக்குதல்களை நடத்துவது, முன்னேறும் படையினர் மீதான வழிமறிப்புச் சண்டைகளைச் செய்வதென்று புலிகளின் இந்த அணிகள் படையினருக்குப் பெரும் சவாலாக இருந்து வந்தன.

கடந்த ஞாயிற்றுக்கிழமையும் கூட- சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் பெரியதொரு அணியைக்கொண்டு தளபதி கேணல் பானு ஒரு ஊடறுப்புத் தாக்குதலை மேற்கொண்டதாகத் தகவல்கள் வெளியாகின.

இதன் பின்னர் சில கிலோமீற்றர் நீளமான முன்னரங்கை விட்டுப் படையினர் பின்வாங்க நேரிட்டதாகவும் கூறப்பட்டது.

படையினருக்குத் தொடர்ச்சியாகத் தொல்லை கொடுத்து வந்த கேணல் பானு, தளபதி லோறன்ஸ் போன்றோரை பிடிக்கும் நோக்கில் படைத்தரப்பு அதிரடியானதொரு சுற்றிவளைப்புத் தாக்குதலை நடத்த முடிவு செய்தது.

இதன்படி, பொதுமக்கள் பாதுகாப்பு வலயத்துக்கு மேற்காக புலிகளிடம் எஞ்சியிருந்த ஆனந்தபுரம் மற்றும் இரணைப்பாலையின் ஒரு பகுதி ஆகியவற்றில் நின்று போரிட்ட புலிகளைச் சுற்றிவளைக்கும் வகையில் மூன்று முக்கிய இராணுவ டிவிசன்கள் தயாராகின.

பிரிகேடியர் சவீந்திர சில்வாவின் 58 ஆவது டிவிசன், கேணல் ரவிப்பிரியவின் 68ஆவது டிவிசன், மேஜர் ஜெனரல் கமால் குணரட்ணவின் 53ஆவது டிவிசன் ஆகியனவே புலிகளை குறிப்பட்ட பிரதேசத்துக்குள் சுற்றிவளைக்கும் நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டன.

முதற் கட்டமாகப் பாதுகாப்பு வலயப்

## மனிதப் பேரவலம் தோற்றுவிக்கப்பட்டால் அது அரசுக்கு நெருக்கடியை ஏற்படுத்தும்

பகுதிக்கான விநியோகப் பாதைகள் குறிவைக்கப்பட்டன.

பொதுமக்கள் பாதுகாப்பு வலயத்தை உள்ளடக்கிய சுமார் 20சதுர கி.மீ பிரதேசத்துக்கு நான்கு பிரதான பாதைகள் உள்ளன.

முதலாவது புதுக்குடியிருப்பில் இருந்து பழையமாத்தளன் நோக்கிச் செல்கிறது. இது பல வாரங்களுக்கு முன்னரே 58 ஆவது டிவிசனால் கைப்பற்றப்பட்டு விட்டது. அடுத்தது இரணைப்பாலை வழியாக புதுமாத்தளன் நோக்கிச் செல்கிறது.

இந்த விநியோகப் பாதையைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்க கடந்த சில வாரங்களாவே இரு தரப்பும் கடுமையாகச் சண்டையிட்டன.

அண்மையில் தான் இந்தப் பாதையை 58ஆவது டிவிசனின் 20ஆவது கஜபா றெஜிமென்ட் கைப்பற்றியது.

இவற்றுக்கு அடுத்தது, பரந்தன்-முல்லைத்தீவு வீதி. இந்த வீதியையும் கடந்தவாரம் கேணல் ரவிப்பிரியவின் 68 ஆவது டிவிசன் கைப்பற்றியது.

இரணைப்பாலை, பச்சைப்புல்மோட்டை வழியாகச் செல்கிறது இந்த வீதி.

பச்சைப்புல்மோட்டைச் சந்தியைக் கைப்பற்றினால் ஆனந்தபுரம் பகுதிக்குள் நிற்கும் புலிகளுக்கான விநியோகங்கள் தடைப்படும்.

இதனைக் கருத்தில் கொண்டு 58ஆவது டிவிசனின் இரண்டு பற்றாலியன்கள் வடக்கேயிருந்து தெற்கு நோக்கி முன்னேறி வந்தன.

இந்த அணியில் லெப்.கேணல் கீத்சிறி ஏக்கநாயக்கவின் தலைமையிலான 11ஆவது இலகு காலாற்படை மற்றும் லெப்.கேணல் குமார் பீரிஸின் 20ஆவது கஜபா றெஜிமெனட் ஆகியன இடம் பெற்றிருந்தன.

இதில் 5 ஆவது விஜயபா காலாற் படை, 6ஆவது கஜபா றெஜிமென்ட் ஆகியன இடம்பெற்றிருந்தன.

இந்தநிலையில் கடந்த புதன்கிழமை 11ஆவது இலகு காலாற்படையணி பச்சைப்புல்மோட்டைச் சந்தியைக் கைப்பற்றியது.

இதற்கான சண்டைகள் சுமார் 15 மணி நேரம் வரை நீடித்திருந்தது. இதன்மூலம் புலிகளின் கடைசி விநியோகப் பாதை துண்டிக்கப்பட்டது.

53 ஆவது டிவிசனின் தளபதி மேஜர் ஜெனரல் கமால் குணரட்ண விடுமுறையில் கொழும்பு திரும்பியதால்- 53ஆவது டிவிசனின் பதில் கட்டளை அதிகாரியாக பிரிகேடியர் ஷாஜி கல்லகே நியமிக்கப்பட்டிருந்தார்.

அவரே தற்போது 53ஆவது டிவிசன் மற்றும் 68ஆவது டிவிசனை உள்ளடக்கிய சண்டையை வழிநடத்துகிறார்.

அதேவேளை தெற்குப் புறமாக முன்னேறிய 53ஆவது டிவிசனின் 5ஆவது விஜயபா காலாற்படைப்பபிரிவு 11வது அலகு காலாற்படையுடன் இணைப்பை ஏற்படுத்தியது.

இப்போது சுமார் ஒரு சதுர கிலோமீற்றர் பிரதேசத்துக்குள் புலிகள். அதனைச் சுற்றிய பகுதிகளில் படையினர்.

அதாவது படையினரின் சுற்றிவளைப்புக்குள் புலிகள் சிக்கிக் கொண்டனர்.

சுமார் 200 புலிகள் வரை இந்தப் பகுதிக்குள் சிக்கியிருக்கலாம் என்று படைத்தரப்பு கணிப்பட்டது.

உள்ளே சிக்கியிருந்த புலிகளை சரணடையுமாறு தொடர்ச்சியாகப் படையினர் தொலைத்தொடர்பு சாதனம் மூலம் அறிவித்துக் கொண்டிருந்தனர். ஆனால் அவர்கள் அதற்குச் செவிசாய்க்காமல் தொடர்ந்து சண்டையிட்டனர்.

இதேவேளை படையினர் சுற்றிவளைக்கின்ற நிலை உருவானபோது- படைத்தரப்பு யாருக்காகப் பொறி வைத்ததோ அவர்கள் அங்கிருக்கவில்லை. கேணல் பானு மற்றும் லோறன்ஸ் உள்ளிட்ட முக்கிய தளபதிகள் இராணுவத்தினரின் முற்றுகையில்

இருந்து தப்பிக் கொண்டனர்.

இதனிடையே படைத்தரப்பு 200 புலிகள் வரை தமது முற்றுகைக்குள் சிக்கியிருக்கலாம் என்று கணிப்பட்டிருந்தது. ஆனாலும் அவர்களில் குறைந்த அளவிலானோரின் சடலங்களே படையினரால்மீட்கப்பட்டிருக்கின்றன.

எஞ்சியோர் எங்கே? அவர்கள் தப்பிச் சென்றார்களா அல்லது இராணுவப் பிரதேசங்களுக்குள் ஊடுருவி விட்டார்களா என்று அறிவதற்குத் தேடுதல்கள் இடம்பெற்று வருகின்றன.

முற்றுகையில் சிக்கிய புலிகளை மீட்கப் புலிகள் பெரியளவிலான ஊடறுப்புத் தாக்குதலை நடத்தலாம் என்று படைத்தரப்பு காத்திருந்தது. ஆனால் புலிகள் எதுவும் செய்யாமல் இருந்து விட்டனர்.

இதிலிருந்து முற்றுகைக்குள் பெருமளவு புலிகள் சிக்கவில்லை என்று கருதப்படுகிறது.

இதற்கிடையே கடந்த புதன்கிழமை கடும்மோதல்கள் நடந்து கொண்டிருந்த போது 50 கலிபர் துப்பாக்கி பொருத்தப்பட்ட புலிகளின் பிக்கப் வாகனம் ஒன்று வழிமாறி இரணைப்பாலை படைநிலைகளுக்குள் புகுந்து விட்டது.

அதன் மீது படையினர் தாக்குதல் நடத்தினர். இந்தச் சம்பவத்தில் அதில் வந்த புலிகள் கொல்லப்பட அந்த வாகனத்தையும் 50 கலிபர் துப்பாக்கியையும் படையினர் கைப்பற்றினர்.

இதற்கிடையே பச்சைப் புல்மோட்டைப் பகுதியில் தாக்குதல் நடத்துவதற்காக 130மி.மீ ஆட்டிலறி ஒன்றைப் புலிகள் கொண்டு சென்றபோது விமானப்படையின் கிபீர் போர் விமானங்கள் தாக்கியழித்தன. இந்த ஆட்டிலறியைச் சேதமடைந்த நிலையில் படையினர் பின்னர் கைப்பற்றியுள்ளனர்.

கடந்த ஓரிரண்டு வாரங்களாக நடைபெற்று வரும் சண்டைகள் மிகவும் உக்கிரமானதாகவும் பலத்த இழப்புகளை ஏற்படுத்துவதாகவும் இருப்பது குறிப்பிடத்தக்கது.

இதற்கிடையே புலிகளின் ஊடுருவல் அணிகளைத் தேடியழிக்கின்ற நடவடிக்கையில் படைத்தரப்பு தொடர்ச்சியாக ஈடுபட்டு வருகிறது.

கடந்த 31ஆம் திகதி கொக்காவில் பகுதியில் 63ஆவது டிவிசன் படையினருக்கும் புலிகளின் அணியொன்றுக்கும் இடையில் மோதல் ஏற்பட்டது. இந்த மோதலில் படையினர் தரப்பில் இழப்புகள் ஏற்பட புலிகள் தப்பிவிட்டனர்.

அதேவேளை விசுவமடுவை அடுத்த பிரமந்தனாறு பகுதியில் கடந்த வியாழக்கிழமை காலை 11.45 மணியளவில் புலிகளின் அணியொன்றின் நடமாட்டத்தை அவதானித்த 57ஆவது டிவிசன் படையினர் பதுங்கியிருந்து தாக்கினர்.

இந்த மோதலின் பின்னர் புலிகள் சிலர் தப்பிவிட தேடுதல் நடத்திய படையினர் 3 புலிகளின் சடலங்களைக் கைப்பற்றினர்.

இதுபோன்ற சம்பவங்கள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன.

இந்த நிலையில் தற்போது பிரதான சண்டைகள் பாதுகாப்பு வலயத்தை அண்டியதாக நடைபெறத் தொடங்கியுள்ளன. 59, 53, 68, 58, 55 ஆகிய டிவிசன்கள் பாதுகாப்பு வலயத்துடன் நெருங்கி நிற்கும் நிலையில் அடுத்த கட்டச் சமர் பாதுகாப்பு வலயத்துக்குள்ளேதான் நடக்க வேண்டும்.

படைத்தரப்பு அடுத்தாக பாதுகாப்பு வலயமாக அறிவிக்கப்பட்ட பகுதியில் தாக்குதல் நடத்தப் போகிறதா? அல்லது பாதுகாப்பு வலயத்தைத் முற்றுகையிட்டு ஒரு நீண்ட முற்றுகைச் சமரின் மூலம் புலிகளைத் தோற்கடிக்கப் போகிறதா? என்ற கேள்வி வலுவாக எழுந்துள்ளது.

பாதுகாப்பு வலயத்துக்குள் நுழைந்து தாக்குதல் நடத்தினால் அது மிகப்பெரும் மனித அவலங்களைத் தோற்றுவிக்கும்.

சர்வதேச ரீதியாக அரசாங்கத்துக்கு பெரும் நெருக்கடியாக உருவெடுக்கும்.

அதேவேளை நீண்ட முற்றுகைச் சமர் என்பது அரசாங்கத்தின் அடுத்த தெரிவாக இருக்கும் என்று நம்ப முடியவில்லை. காரணம் புலிகளுக்கு மூச்சுவிடக் கூட நேரக் கொடுக்காமல் முற்றாக அழிக்க வேண்டும் என்பதே அரசதரப்பின் நோக்கம்.

பாதுகாப்பு வலயத்துக்கு வெளியே புலிகளைச் சண்டைக்கு இழுத்து முற்றாக அழிப்பதும் சாத்தியமில்லை. ஆக, இப் போது பாதுகாப்பு வலயமே உக்கிர மான இறுதிச் சண்டைக்கான கொலைக்களமாக மாறும் நிலை உருவாகியிருக்கிறது.

# இன்று ஒரு தகவல்

## நல்ல பெயர்

நண்பர் ஒருவர் தலையைப் பிய்த்துக் கொண்டே என்னிடம் வந்தர். வழக்கமாக நம்மிடம் வருபவர்கள் திரும்பிப் போகும்போது தான் தலையைப் பிய்த்துக் கொண்டு போவார்கள். இவர் வரும்போதே இப்படி வருகிறாரே... என்று யோசித்தேன்.

"என்ன விஷயம்?" என்றேன்.

"மகன் பிறந்திருக்கிறான்" என்றார் அவர். "அப்படியா? அதற்கேன் இப்படி ஆகிவிட்டீர்கள்?" என்றேன்.

"அவனுக்கு ஒரு பெயர் வைக்க வேண்டும். நல்ல பெயராக அமையவேண்டும். அதுதான் என்ன பெயர் சூட்டலாம் என்று யோசித்துக் கொண்டு வந்தேன்" என்றார்.

உடனே அது சம்பந்தமாக எனக்குத் தெரிந்த சில செய்திகளை அவரிடம் சொன்னேன். மனோதத்துவ நிபுணர்கள் என்ன சொல்கிறார்கள் தெரியுமா?

குழந்தையைப் பெற்றவர்கள் அதன் எதிர்காலம் எப்படி அமைய வேண்டும் என்று ஆசைப்படுகிறார்களோ அல்லது யார் மாதிரி தங்கள் குழந்தை ஆக வேண்டும் என விரும்புகிறார்களோ அப்படியான பெயரைத்தான் சூட்டுகிறார்களாம்.

தன்னை மிகவும் வசீகரித்துள்ள மகான், தலைவர், விஞ்ஞானி, உறவுக்காரர், நண்பர், ஆசிரியர், பாட்டனார்- இப்படி ஏதாவது ஒரு இலட்சியத்தோடு தான் முதல் குழந்தையின் பெயரை 75 சதவீதம் பேர் தேர்ந்தெடுக்கிறார்களாம்.

நன்றாக வாழ்ந்தவர்கள் அல்லது வாழ்பவர்கள் பெயரைக் குழந்தைக்குச் சூட்டும்போது, அந்தக் குழந்தைக்கு நாமும் அந்தப் பெயருக்குத் தகுந்தாற் போல் உயரவேண்டும் என்ற உந்துசக்தி இயல்பாகவே வளர்கிறதாம். இவையெல்லாம் நவீன ஆராய்ச்சி முடிவுகள்.

சிலர் வித்தியாசமாக இருக்கவேண்டும் என்பதற்காக குழந்தைகளுக்கு விநோதமான பெயர் எதையாவது வைத்து விடுவது வழக்கம். இது சிலசமயங்களில் மற்ற பிள்ளைகள் கேலி செய்வது மாதிரி ஆகிவிடும். அதனால் சண்டையிட வேண்டியிருக்கும். பிற்காலத்தில் முரட்டுத் தனம் வளர இதுவே காரணமாகிவிடும்.

அண்மையில் ஒரு ஆராய்ச்சி நடந்ததாம். ஆராய்ச்சி செய்தவர்கள் என்ன சொல்கிறார்கள் தெரியுமா?

விபரீதமான பெயருடையவர்கள் மற்றவர்களை விட நான்கு மடங்கு அதிகமாக சட்டத்தை மீறியவர்களாக இருக்கிறார்களாம்.

இன்னும் சிலருக்கு தாழ்வுமனப்பான்மை ஏற்பட்டு ஒதுங்கி வாழ ஆரம்பித்து விடுகிறார்களாம். எதற்கும் உபயோகமில்லாதவர்களாகி விடுகிறார்களாம்.

அமெரிக்காவின் சிக்காக்கோ நகரில் ஒரு மனநோய் மருத்துவ ஆராய்ச்சி நடந்தது.

அந்த ஆராய்ச்சியில் விசித்திரமான விபரீதமான அர்த்தம் தொனிக்கும் பெயருடையவர்கள் தான் அதிகளவில் மன நோயால் பாதிக்கப்பட்டுள்ளதாகச் சொல்கிறார்கள்.

லண்டனில் இருக்கும் டாக்டர் ஒருவர், "ஒருவருடைய பெயர் அவருடைய உடல் நலத்தையும் கூட பாதிக்கவல்லது" என்கிறார்.

இப்படியெல்லாம் கேள்விப்படும் போது நமக்கே நம்புவதற்கு கஷ்டமாகத்தான் இருக்கிறது. இருந்தாலும் மன இயல் நிபுணர்கள் சொல்வதனால் இதெல்லாம் சிந்திக்க வேண்டிய கருத்துக்கள்.

**நல்ல தமிழ்ப் பெயரைப் பிள்ளைக்குச் சூட்டுங்கள்**
**நான் ஒரு தமிழன் என்று அடையாளம் காட்டவே**

என்று பாடினார். கலைமாமணி கவிஞர் நா.மா. முத்துக்கூத்தன்.

**தமிழ்ப்பண்பு வளரவே தமிழினில் பெயர் சூட்டுவோம் எனப் பாடினார் தமிழ்மாமணி கவிஞர் சீனி திருநாவுக்கரசு.**

அதனால் பிள்ளைகளுக்குப் பெயர் சூட்டும் போது கவனம் தேவை.

இந்தக் காலப் பிள்ளைகளெல்லாம் ரொம்ப முன்னேற்றம். அன்று ஒரு சின்னப்பையனைப் பார்த்து, "என்னப்பா பள்ளிக் கூடத்தில் சேர்ந்திட்டியா?" என்றேன்.

"சேர்ந்திட்டேன்" என்றான்.

"உங்கள் ரீச்சரின் பெயர் என்ன?" என்று கேட்டேன்.

"இன்னும் நாங்கள் வைக்கவில்லை" என்றான் அவன்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# க.பொ.த சாதாரணதர பரீட்சை மோசடிகளில் ஈடுபட்ட 500 மாணவர்களின் பெறுபேறுகள் இடைநிறுத்தம்

(கொழும்பு)

கல்விப் பொது தராதர சாதாரண பரீட்சையில் பல்வேறு மோசடிகளில் ஈடுபட்ட 500 மாணவர்களின் பெறுபேறுகளை இடை நிறுத்தியுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அனுர எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

பரீட்சை மோசடி தொடர்பாக மேற்கொள்ளப்படும் விசாரணைகளின் பின்னர் பெறுபேறுகளை வெளியிடுவதா இல்லையா என்பதை தீர்மானிக்க உள்ளதாக அவர் குறிப்பிட்டார். குற்றவாளிகளாக காணப்படும் மாணவர்களுக்கு இவர்கள் இழைத்த குற்றத்திற்கேற்ப தண்டனை வழங்கப்படும் என்றும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை க.பொ.த. சாதாரண பரீட்சைப் பெறுபேறுகள் சகல பாடசாலைகளுக்கும் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் வெளிமாவட்ட பாடசாலைகளுக்கு பரீட்சைப் பெறுபேறுகள் இன்றைய தினம் கிடைக்குமெனவும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் மேலும் குறிப்பிட்டார். (6-4)

# 'வணங்காமண்' கப்பல் இலங்கையை அண்மித்தபின் அரசிடம் அனுமதி கோரப்படும்

## ஏற்பாட்டுக்குழுப் பேச்சாளர் தெரிவிப்பு

வன்னியிலுள்ள மக்களுக்கான உணவு மற்றும் மருந்துப் பொருட்களுடன் இலங்கை நோக்கி வரவுள்ள 'வணங்காமண்' கப்பலில் தமிழர்கள் அல்லாத வேற்று நாட்டவர்களும், தமிழர்களல்லாத தொண்டு நிறுவனப் பிரதிநிதிகளும், தமிழர்களல்லாத மருத்துவக் குழுவினரும் மேலும் சில புகழ் பெற்றவர்களுமே பயணிக்கவுள்ளதாக கப்பலின் ஏற்பாட்டுக்குழு உறுப்பினரும் பிரித்தானிய தமிழ் பேரவைப் பேச்சாளருமான சபாநாதன் தெரிவித்துள்ளார்.

இக்கப்பல் இலங்கையை அண்டிய சர்வதேசக் கடற்பரப்பிற்குள் வந்த பின்னரே இலங்கைக் கடற்பரப்பினுள் நுழைவதற்கான அனுமதியை கப்பலில் பயணிப்பவர்கள் தமது நாடுகளுக்கூடாக கோரவுள்ளதாகவும் 'வணங்காமன்' கப்பல் குறித்த முக்கிய தகவல்களையும் அதில் பயணிக்கும் உலகப் பிரபல்யம் வாய்ந்தவர்கள் குறித்த விபரங்களையும் இரகசியமாக வைத்திருப்பதற்கும் வணங்காமண் ஏற்பாட்டுக்குழு முடிவு செய்திருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (6)

# விபத்தில் காயமடைந்த குடும்பஸ்தர் வைத்தியசாலையில்

(யாழப்பாணம)

சைக்கிள் - மோட்டார் சைக்கிள் விபத்தில் காயமடைந்த குடும்பஸ்தர் ஒருவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் கடந்த வியாழக்கிழமை இடம் பெற்றுள்ளது. இதில் கோண்டாவிலைச் சேர்ந்த நடராஜா (வயது46) என்பவரே காயமடைந் துள்ளார்.

இது குறித்து தெரியவருவதாவது,

பிரஸ்தாப நபர் கோண்டாவில் காரைக்கால் வீதியால் சைக்கிளில் சென்று கொண்டிருந்த போது எதிரில் வந்த மோட்டார் சைக்கிள் மோதியதால் காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் மேலதிக சிகிச்சைக் காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (6-30)

# ஆசிரியர்களுக்கான சம்பள கொடுப்பனவு

இடம்பெயர்ந்த ஆசிரியர்களுக்கான சம்பளப் பட்டியல்கள் மாகாண கல்வித் திணைக்களத் தால் அனுப்பி வைக் கப்பட்டுள்ளன.

வலிகாமம் கல்வி வலயத்தைச் சேர்ந்த ஆசிரியர்கள் தமது வரவுகளை உறுதிப்படுத்தும் கடிதங்களுடன் இன்று அல்லது நாளை சம்பளப்பட்டியல்களில் கையொப்பமிடுவதன் மூலம் ஏப்ரல் மாத சம்பளத்தை விரைவாக பெற்றுக் கொள்ள முடியும் என வலிகாம வலயக் கல்விப்பணிப்பாளர் ப. விக் னேஸ்வரன் தெரிவித்துள்ளார். (6-4)




கைதடி நுணாவில் அ.த.க பாடசாலையின் வருடாந்த இல்லமெய்வன்மைப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட ந. சத்தியநாதன், அதிபர் த. அம்பலவானர் விளையாட்டுத்துறைச் செயலர் த. ஜெபதாஸ் ஆகியோர் சான்றிதழ் பெற்ற மாணவர்களுடன் காணப்படுகின்றனர்.

# இராசி பலன்

06.04.2009
(பங்குனி 24, திங்கட்கிழமை)
துவாதசி முன்னிரவு11.40 மணிவரை
மகம் பிற்பகல் 5.08 மணிவரை
இராகுகாலம் 7.38-9.08 மணிவரை
சுபநேரம் 12.08- 1.38 மணிவரை
நான்காவது பங்குனித் திங்கள்.

| | |
|---|---|
| மேடம் | அஜீரணக் கோளாறு, காரிய இடையூறு, தாழ்ந்த சுபாவம், குடும்பக் கவலை. |
| இடபம் | தன்னம்பிக்கைக் குறைவு, ரோக நிலை, தனவிரயம், முயற்சி தாமதம். |
| மிதுனம் | மனோ தைரியம், காரிய அனுகூலம், தனலாபம், போசன சுகம். |
| கடகம் | மனோ சங்கடம், போசனசுகக் குறைவு, அதிக செலவு, முயற்சி தாமதம். |
| சிங்கம் | வெகுமானம், மாதர் நட்பு, சயன சுகம், நல்லமுயற்சி. |
| கன்னி | பிறருக்கு உதவுதல், காரிய அலைச்சல், சுபசெலவு, கோபப் படுதல். |
| துலாம் | தடைப்பட்ட காரியம் கைகூடும், குடும்ப மகிழ்ச்சி, கீர்த்தி, தன தானிய சேர்க்கை. |
| விருச்சிகம் | அதிகாரம், இஷ்டசித்தி, இன சனத்தொடர்பு , போசன சுகம். |
| தனுசு | எதிர்பாராத செலவு, உத்தியோக பங்கம், அரோக்கியக் குறைவு, பிரயாணம். |
| மகரம் | மனக்கவலை, பொருள் விரயம், வேலைச்சுமை, போசன சுகம். |
| கும்பம் | எடுத்த காரியம் கைகூடும், பெருமையடைதல், களஸ்திர நன்மை, பெருள் சேர்க்கை. |
| மீனம் | தடைப்பட்ட காரியம் கை கூடும், சுவாரஸ்யம், பகைவரால் நன்மை, ஆரோக்கியம். |

வளவன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் |
|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 40 | 40 |
| உருளைக்கிழங்கு | 70-80 | 80-90 |
| பச்சைமிளகாய் | 50 | 50 |
| தக்காளி | 35 | 40 |
| அவரை | - | 30 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 60 |
| கோவா | 10 | 20 |
| கரட் | 30 | 40 |
| பூசணி | 15 | 40 |
| புடோல் | 30 | 30 |
| வாழைக்காய் | 70 | 60 |
| சின்ன வெங்காயம் | 40 | 35-40 |
| பெரிய வெங்காயம் | 60 | 60-70 |
| பாகற்காய் | 80 | 80 |
| வெண்டிக்காய் | 40 | 50 |
| கரணைக் கிழங்கு | - | 40 |
| பயிற்றங்காய் | 20 | 40 |
| லீக்ஸ் | 140 | 120 |
| போஞ்சி | - | - |
| கீரை - 1 பிடி | 30 | 25-30 |
| தேசிக்காய் | 120 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 30-35 |





வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை முன்பள்ளியின் 32 ஆவது விளையாட்டு விழா வதிரி திரு இருதயக் கல்லூரி மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

இதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வடமராட்சி பிரதிக் கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் உள்ளிட்ட விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும், மாணவர்களின் பாண்ட் வாத்திய நிகழ்வினையும், வெற்றியீட்டிய மாணவர் ஒருவருக்கு பரிசில் வழங்கப்படுவதையும் படங்களில் காணலாம்.

## ஆன்மீக சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

சுழிபுரம் வழக்கம்பரை முத்துமாரி அம்மன் ஆலயத்தில் நாளை செவ்வாய்க் கிழமை மாலை 5மணிக்கு பங்குனி பூர நன்நாளில் சமயச் சொற்பொழிவு நடைபெறவுள்ளது.

இச்சொற்பொழிவுநிகழ்வினை "தளர்வறியா மனம் தரும் தாய்" எனும் பொருளில் செஞ்சொற் செல்வர் ஆறுதிருமுருகன் வழங்கவுள்ளார். (6-14)

## யோகாசன வகுப்புகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

கந்தர் மடம் குமாரசுவாமி வீதியில் அமைந்துள்ள ஸ்ரீ சிவகுருநாத குருபீட (வேதாந்த மடம்) தியான மண்டபத்தில் எதிர்வரும் 9 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 6.30 மணிக்கு புதிய யோகாசன வகுப்புகள் ஆரம்பமாகவுள்ளது.

இவ்வகுப்பில் இருபாலாரும் வயது வேறுபாடுகளின்றி கலந்துகொண்டு பயன்பெறலாமென பீடாதிபதி ஸ்ரீ வேத வித்யாசாகர சுவாமிகள் அறிவித்துள்ளார். (ஓ)

## வீதி புனரமைக்க கோரிக்கை

(வடமராட்சி)

பருத்தித்துறை வல்லிபுரப் பரியாரியார் வீதி நீண்டகாலமாகப் புனரமைக்கப்படாமல் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வீதி வாய்க்கால் போன்று காணப்படுவதினால் இதனூடாக போக்குவரத்துச் செய்வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வீதியில் பல நூற்றுக்கணக்கான குடும்பங்கள் இருந்து வரும் வேளை, இவ்வீதி பல கிராமங்களை இணைக்கின்ற ஒரு இணைப்பு வீதியாகவும் காணப்படுகிறது.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவ் வீதியை அடுத்து வரும் மழை காலத்திற்கு முன்பு புனரமைத்துத் தருமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஓ-10)

# கல்வி நிலையில் முன்னேறுவதற்குரிய உந்துதல் ஏற்பட்டாலே முழு உச்சப்பயனை அடையலாம்

## வலி.வடக்கு பிரதேச செயலர்

(யாழ்ப்பாணம்)

கல்வி நிலையில் நாம் முன்னேற வேண்டும் என்ற மன உந்தல் பொதுமக்களுக்கு ஏற்படவேண்டும். அவ்வாறு ஏற்படாவிட்டால் யார் எத்தகைய உதவிகளை வழங்கினாலும் அவை முழு உச்சப் பயனையும் தரமாட்டாது.

வலிகாமம் வலய முறைசாராக் கல்விப் பிரிவினரால் சுதந்திரபுரம் பாரதி நூலகத்தில் இடம்பெற்ற கட்டாயக் கல்வி தொடர்பான கருத்தரங்கில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய வலி.வடக்கு பிரதேச செயலர் சி.முரளிதரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், ஒவ்வொருவர் வாழ்விலும் அறிவியல் துறை சார்ந்த மாற்றங்கள் ஏற்படவேண்டும். பொருளாதார நிலை முன்னேற்றமடைகின்ற அதே வேளையில் கல்வி நிலையில் முன்னேற்றம் ஏற்படவேண்டும். இப்பகுதி மக்களின் முன்னேற்றத்திற்கு என்னாலான பங்களிப்பை நிச்சயம் வழங்குவேன்.

வலிகாமம் வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி நாகராசா தமது உரையில், பெற்றோர் நமது பிள்ளைக்ளின் கல்வி வளர்ச்சியில் அன்புடன் கூடிய ஆதரவை வழங்கவேண்டும். நல்ல வளம் தரும் ஆரோக்கியமான சிந்தனைகள் சிறுவர் மனதில் ஏற்படுத்த முயற்சிக்க வேண்டும். எதிர்மறையான எண்ணங்களுக்கு பதிலாக ஆக்கம் தரும் சிந்தனைகளை சிறுவர் உள்ளங்களில் ஏற்படுத்த வேண்டும். அன்பு, அரவணைப்பு, பாராட்டுதல்களை பிள்ளைகளுக்கு பெற்றோர் வழங்கவேண்டும் என்றார். (6)




## பரு.நவீன சந்தை கடைகளை வாடகைக்கு விட தீர்மானம்

(மருதங்கேணி)

பருத்தித்துறை நகர மத்தியில் நெக்டப் நிறுவனத்தின் உதவியுடன் அமைக்கப்பட்டு வரும் நவீன சந்தையிலுள்ள கடைகள் வாடகைக்கு விடுவது தொடர்பாக தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

எனவே 1983, 1990 ஆம் ஆண்டு காலப் பகுதியின் பருத்தித்துறை பொதுச் சந்தையில் கடைகளின் வாடகையாளராக இருந்தவர்கள், பருத்தித்துறை நகரசபைக்கு செலுத்திய பணவிபரம் மற்றும் ஒப்பந்தப் பத்திரம் ஆகியவற்றுடன் தொடர்புகொள்ளுமாறு பருத்தித்துறை நகரசபை செயலாளர் கேட்டுள்ளார். (6-35)

## இலவச மனைமுகாமைத்துவ கற்கைநெறிகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கல்வி வலய முறைசாராக் கல்விப் பிரிவினரால் கோண்டாவில் இந்து மகாவித்தியாலயத்தில் இலவச மனைமுகாமைத்துவம், வீட்டு மின் சுற்று வகுப்புகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன. மனைமுகாமைத்துவப் பயிற்சி நெறியின் கீழ் கேக் அலங்காரம், தலை அலங்காரம், முக அலங்காரம், சாறி அலங்காரம், தையல், சமையற்கலை, கண்ணாடி, பெயின்ரிங் என்பன ஆரம்பிக்கப்பட்டுள்ளன. கற்கை நெறியை மேற்கொள்ள விரும்புவோர் உடன் தொடர்புகொள்ளுமாறு பாடசாலை அதிபர் கேட்டுக்கொண்டுள்ளார். (6)

## யாழ்.பிரதேச செயலக மகளிர் தின நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ். பிரதேச செயலக மகளிர் தின நிகழ்வு இன்று காலை 9 மணிக்கு யாழ்.பிரதேச மாநாட்டு மண்டபத்தில் உதவிப் பிரதேச செயலர் த. முகுந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பிரதேச செயலர் மரியதாசன் ஜெகூ கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினராக மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி என்.ஏ. ஜெயராஜன், உதவித் திட்டப் பணிப்பாளர் க.க.சிவசுந்திரன், யாழ். பிரதேச செயலக கணக்காளர் வே.வேல்நிதி ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (4)

## துவிச்சக்கர வண்டிகளுக்கான உரிமைத் தகடுகள்

(மருதங்கேணி)

பருத்தித்துறைப் பிரதேச சபையினால் இவ்வாண்டுக்குரிய துவிச்சக்கரவண்டி உரிமைத் தகடுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

துவிச்சக்கரவண்டி உரிமையாளர்கள் மந்திகையில் அமைந்திருக்கும் பருத்தித்துறை பிரதேச தலைமை அலுவலகத்தில் உரிமைத் தகட்டைப் பெற்றுக்கொள்ளலாம் எனப் பருத்தித்துறைப் பிரதேசசபை செயலாளர் அறிவித்துள்ளார். (6-35)

## வன்முறையற்ற கருத்துப் பரிமாற்றம் தொடர்பான பயிற்சிப் பட்டறை

கோண்டாவில் கிழக்கு அசெம்பிளி ஒவ் கோட் திருச்சபையில் அகவொளி நிலையத்தின் அனுசரணையுடன் வன்முறையற்ற கருத்துப் பரிமாற்றமும் தகவல் தொடர்பாடலும் எனும் தொனிப் பொருளில் பயிற்சிப் பட்டறைகள் தொடர்ச்சியாக ஏற்பாடு செய்யப் பட்டுள்ளன.

இதன் முதலாவது அமர்வு கடந்த சனிக்கிழமை நடைபெற்றுள்ளது. அடுத்த அமர்வுகள் பாடசாலை விடுமுறைக் காலத்தில் நடாத் தப்படவிருப்பதால் விரும்பும் மாணவர்கள் கலந்து கொள்ளலாம் என அருட்போதகர் க.ராஜா கேட்டுள்ளார். (ஓ-36)

## வளர்ப்பு நாய்களுக்கான விலங்கு விசர் நோய் தடுப்பூசி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபை எல்லைக்குள் அமைந்த குருநகர் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவிற்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கான விலங்கு விசர்நோய்த் தடுப்பூசி (ARV) நாளை செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிமுதல் 11.30 மணிவரை அன்னை வேளாங்கன்னி கோவிலடியிலும், பிற்பகல் 1.30 மணிமுதல் 3.30 மணிவரை திருநகர் கியூமெடிக்கா பாலர் பாடசாலையிலும் வைத்து வழங்கப்படவுள்ளது.

எனவே இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தங்களது வளர்ப்பு நாய்களுக்குத் தடுப்பூசியினை ஏற்றிக்கொள்ளுமாறு யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ம.மரியதாசன் கேட்டுக்கொண்டுள்ளார். (6)




யாழ்ப்பாணத்திலுள்ள அனைத்து இந்து ஆலய நிர்வாகங்களுடனான கலந்துரையாடல் நேற்று நல்லை ஆதீன மண்டபத்தில் இடம்பெற்றது.

நல்லை ஆதீன முதல்வரின் தலைமையில் இக் கலந்துரையாடல் இடம்பெறுவதையும், கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

# இலங்கையில் தமிழர் 115

## சிங்களரும் - தமிழரும்: இணைச் சாதனையாளர் 1070 - 1200

பௌத்தரல்லாதார் அரசுரிமை பெறத் தகுதியற்றவர் என நிஸ்ஸங்க மல்லன் வற்புறுத்தியபோதும், சைவமதத்தை எதிர்ப்பவனாக அவன் ஆட்சி புரியவில்லை. அவனுடைய பல கல்வெட்டுக்களில் கொடுக்கப்பட்டுள்ள புகழுரைகளை நம்புவதாயின், பௌத்த சங்கத்தார்க்கும் பிராமணர்க்கும் அவன் விலையுயர்ந்த கொடைகளை வழங்கினான் என அறியலாம்.

அவன் பல்வேறு இடங்களில் நிறுவிய பல தர்மசத்திரங்களுள் பொலநறுவையில் நிறுவிய பிராமண சத்திரத்தையும் இராமேஸ்வரத்தில் நிறுவிய தர்மசத்திரத்தையும் குறிப்பிடலாம். இராமேஸ்வரத்தில் அவன் பொறிப்பித்த கல்வெட்டில் அவ்விடத்தில் அவன் மேற்கொண்ட நடவடிக்கைகள் பற்றிய விவரங்கள் கிடைக்கின்றன. கந்தளாய்ப் பிரமதேயத்தில் இருந்த சத்திரமாகிய பார்வதி சத்திரத்துக்கு நிஸ்ஸங்க மல்லன் சென்று தானங்கள் வழங்கிய பின் ஆடல் பாடல் நிகழ்ச்சிகளில் பங்குபற்றினான். பார்வதி சத்திரம் என்ற பெயரே அவனுடைய தாயாரின் பெயரால் (தாயார் பெயர் பார்வதீ மஹாதேவீ) இடப்பட்டிருக்கலாம்.

இச் செயல்கள் மட்டுமின்றி, அம் மன்னன் பிராமணீயக கிரியைகளை நடத்தியது பற்றியும் அறிகின்றோம். அவற்றுள் ஒன்று நவக்கிரக சாந்தி எனப்படும் கிரியை. அவன் சைவக் கோயில் எதுவும் கட்டியது பற்றிய சான்று கிடைக்காவிட்டாலும், பாண்டிய அரசில் ஒரு பழைய கோயிலைப் புதுக்கியமைத்து அதற்குத் தன் பெயரால் நிஸ்ஸங்கேஸ்வரம் என்ற பெயரை இட்டான். இவற்றை எல்லாம் நோக்குமிடத்து ஒரு விஷயம் தெளிவாகின்றது. அதாவது நிஸ்ஸங்க மல்லன் பௌத்தத்தையும் சைவத்தையும் ஆதரித்த ஒரு மன்னன் என்பது.

### தமிழ்ப் பௌத்தமும் சிங்கள பௌத்தமும்

ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாகத் தமிழ்ப் பௌத்தத்துக்கும் சிங்கள பௌத்தத்துக்கும் இடையில் இருந்த நெருங்கிய நல்லுறவின் வரலாற்றில் இக்காலப் பகுதி இன்னொரு சுவையான அத்தியாயமாக அமைகின்றது. ஆறாம் நூற்றாண்டுக்கும் பத்தாம் நூற்றாண்டுக்கும் இடையில் நடைபெற்ற சமயப் பூசல்களின் பின், சைவ வைணவ மதங்களுடைய வெற்றியுடன், தென்னிந்தியாவில் சமய அமைதிக் காலம் ஒன்று உதயமாகியது. எந்த வித எதிர்ப்புமின்றிப் பௌத்த மதம் தொடர்ந்து சிலகாலம் இயங்குவதற்குச் சோழருடைய சமயக் கொள்கை உதவியது.

முன்பு தமிழ்நாட்டில் பிரசித்தி பெற்றிருந்த பௌத்த பள்ளிகள் சில தொடர்ந்து சோழராட்சியின் போது இயங்கின. இவற்றுள் சில தேரவாத பௌத்த பள்ளிகள், வேறு சில மஹாயான பௌத்த பள்ளிகள், தமிழ்ப் பௌத்தர்களுடைய எண்ணிக்கை முன்னை விடப் பெரிதும் குறைந்திருந்தாலும், தமிழ் நாட்டின் சில பாகங்களிலும் இலங்கையிலும் பதினோராம் பன்னிரண்டாம் நூற்றாண்டுகளில் தமிழ்ப் பௌத்தர்கள் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையில் இருந்தனர். சிங்கள பௌத்த சங்கத்துக்கும் தமிழ்நாட்டு பௌத்த சங்கங்களுக்கும் இடையில் இருந்த நெருங்கிய நல்லுறவு தமிழ்ப் பௌத்தர்களுக்கு ஊக்கமூட்டுவதாய் அமைந்தது என்று கூறலாம். அத்துடன், தென்கிழக்காசியாவில் ஸ்ரீ விஜய அரசின் ஆளும் வம்சத்தவர்களாகிய சைலேந்திர மன்னர்களுக்கும் சோழர்களுக்கும் இடையில் இருந்த நல்லுறவும் தமிழ்நாட்டின் மஹாயான பௌத்த மையங்களில் சிறப்பாக நாகபட்டினத்தில் பௌத்த பள்ளிகள் தொடர்ந்து தொல்லையின்றி இயங்க உதவியது.

நாகபட்டினத்தில் சைலேந்திர மன்னர் அமைத்த பௌத்த பள்ளிகளுக்கு ராஜராஜப் பெரும்பள்ளி என்றும் ராஜேந்திரசோழப் பெரும்பள்ளி என்றும் சோழப் பெருமன்னர் பெயர்களையிட்டுச் சோழ மன்னர்களுடைய ஆதரவையும் சைலேந்திர மன்னர் பெற்றுக் கொடுத்தனர்.

இப் பள்ளிகளுக்கு சைலேந்திரர் விண்ணப்பத்தின் விளைவாக ராஜராஜ சோழனும் ராஜேந்திர சோழனும் நிலத்தானம் செய்தனர். இத்தகைய ஆர்வமூட்டும் நிகழ்ச்சிகள் தமிழ் பௌத்தம் தொடர்பாக நடைபெற்றிருந்தும், இவ் வரலாறு பற்றிய விரிவான தகவல்கள் கிடைக்காமை கவலைக்குரிய விஷயமாகும்.

தமிழ்ப் பௌத்தம் பற்றித் தமிழ் நாட்டில் அதிகம் பேணப்படாத இந்நிலையில் இலங்கை மற்றும் பர்மா போன்ற நாடுகளில் பௌத்த சங்கத்தார் எழுதிவைத்த பாளி நூல்களிலிருந்து ஒரு சில விஷயங்களைப் பெறக் கூடியதாக உள்ளது. இத் தகவல்களும் இல்லாவிட்டால் தமிழ்ப் பௌத்தம் பத்தாம் நூற்றாண்டின் பின் அழிந்து போய்விட்டது என்றே முடிவு செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கும்.

தமிழ்நாட்டின் மூன்று மண்டலங்களாகிய சோழ பாண்டிய தொண்டை மண்டலங்களில் தமிழ்ப் பௌத்த துறவிகளுடைய சங்கங்கள் வலியிழக்காது இயங்கின என்பதை அறிந்து கொள்ளப் பதினோராம், பன்னிரண்டாம், பதின்மூன்றாம் நூற்றாண்டுகளில் எழுதப்பட்ட பாளி நூல்கள் தெளிவாகச் சான்று தருகின்றன. இம் மண்டலங்களின் குறுநிலத் தலைவர்கள் பௌத்த பள்ளிகளுக்கு ஆதரவு கொடுத்தனர்.

தொண்டடை மண்டலத்தில் காஞ்சி தொடர்ந்து ஒரு முக்கிய தேரவாத பௌத்த மையமாக விளங்கியது. சோழ நாட்டில் பல இடங்களில் பௌத்த பள்ளிகள் இருந்தன. சோழ நாட்டுப் பௌத்த சங்கம் மறுமலர்ச்சி பெற்று இக் காலத்தில் பெரிதும் மதிக்கப்பட்ட பௌத்த சங்கமாக விளங்கியது.

அங்கு பௌத்த சங்கம் சுத்தி செய்யப்பட்டுச் சிறப்புப் பெற்றதால் சிங்கள பௌத்த சங்கத்தைக் காட்டிலும் கூடுதலாக மரபு வழுவாத சங்கமாகத் தங்கள் சங்கத்தை சோழ நாட்டுப் பௌத்த துறவிகள் கருதினர். இவர்கள் சிங்கள பௌத்த சங்கத்துடன் நெருங்கிய உறவு பூண்டு, பல தடவை இலங்கையிலிருந்த பௌத்த பள்ளிகளுக்குச் சென்று திரும்பினர். தங்கள் அறிவை மேலும் வளர்ப்பதற்காக அவர்கள் இலங்கைக்குச் சென்றனர். அவ்வாறே வர்மா போன்ற பிற பௌத்த நாடுகளுக்கும் அவர்கள் சென்றிருப்பர். இத்தகைய தொடர்புகள் பௌத்தத்தைத் தமிழ்நாட்டில் வளர்ப்பதற்கு அவர்களுக்கு ஊக்கம் அளித்திருக்கும் என்பதில் ஐயமில்லை. (தொடரும்)

பேராசிரியர்
**கா. இந்திரபாலா**

---

# உலக மக்களைக் கவர்ந்த ஒபாமா
## அடிமைச் சந்தையிலிருந்து வெள்ளை மாளிகை வரை 34



## ஒபாமாவின் பள்ளியில் தந்தை ஆற்றிய உரை

ஒபாமாவின் தந்தை பேச அரம்பித்ததும் சக மாணவர்கள் ஒபாமாவின் பக்கம் திரும்பிப் பார்த்தனர். ஒபாமாவோ தன் தலையை இறுக்கமாக்கிக் கொண்டு கரும்பலகையில் வெறுமையான புள்ளியில் தன் கவனத்தைச் செலுத்திக் கொண்டிருந்தார்.

**ஜிம்பொன்**

தந்தை கொஞ்சநேரம் பேசிய பின் தான் ஒபாமா பேச்சைக் கேட்கும் நிலைக்கு வந்தார். பூமியின் தோற்றம், மனிதன் தோன்றிய விதம், காட்டு மிருகங்கங்கள், இனங்கள், அவர்களின் தலைவனாவதற்கு இளைஞன் ஒருவன் சிங்கம் ஒன்றைக் கொன்று தன் ஆண்மையை நிரூபிக்க வேண்டிய கட்டாயம், லூவோ இனத்தவர்களின் பழக்கவழக்கங்கள், எப்படி முதியவர்கள் மதிக்கப்பட்டார்கள், முதியவர்கள் சட்டங்களை இயற்றினார்கள், அவற்றை எல்லோரும் கேட்டு எப்படி வாழ்ந்தனர் போன்றவற்றையும் கென்யா பிரித்தானிய ஆட்சியின் கீழ் அடிமைப்பட்டுக் கிடந்தமை, விடுதலைப் போராட்டம் என்று பல விடயங்களைத் தொட்டுச் சென்றார்.

இந்தப் பேச்சு ஒபாமாவின் மனதில் நீங்காத இடம்பிடித்துக் கொண்டது. பேச்சு முடிந்ததும் செல்வி ஹெவ்றியின் முகத்தில் பெருமிதம் ததும்பி வழிந்தது. வகுப்பு மாணவர்கள் தங்கள் மகிழ்ச்சியையும் திருப்தியையும் காட்ட கைதட்டி ஆரவாரித்தனர். சிலர் துணிவை வரவழைத்துக் கொண்டு கேள்விக்கணைகள் தொடுத்தனர். ஒவ்வொரு வினாவையும் தந்தை கவனமாக ஆராய்ந்து பதில் கொடுத்தார். மதிய போசனத்துக்கு மணியடித்தது. எல்ட்றட்ச் என்ற ஒபாமாவின் கணித ஆசிரியர் ஒரு ஹவாயினன். கண்டிப்பானவர். ஆளுமை நிறைந்தவர். யாரும் அவரிடம் தப்பமுடியாது.

அவர் ஒபாமாவிடம் நெருங்கி " ஹேய்! உனக்கு வசீகரமான அப்பா வாய்த்திருக்கிறார்" என்று பெருமைப்படுத்தினார். "மனித மாமிசம் புசிப்பவரா உன் அப்பா ?" என்று கேட்ட அவர் "உனது அப்பா எவ்வளவு நிதானமானவர்" என்று பாராட்டினார்.

தந்தை வந்து போய் ஐந்து வருடங்கள் ஓடிவிட்டன. படிப்பு, மாணவர் அறிக்கைகள், கல்லூரி அதிபர் தன் அலுவலகத்துக்கு அழைத்து உரையாடல், சாரதிப் பரீட்சை இவ்வாறு பல விடயங்கள் நடந்தேறின. ஒபாமாவின் மதிப்பு வகுப்பு மட்டத்தில் முன்னேற்றம் கண்டிருந்தது.

அது அவருக்கும் பரம திருப்தியைக் கொடுத்தது. அம்மா லோலோவைப் பிரிந்து வாழத் தொடங்கிவிட்டார். ஹவாய்க்குத் திரும்பி வந்து மானிடவியலில் மேற்படிப்பை மேற்கொண்டு முதுகலைமாணிப் பட்டம் பெற்றார். ஒபாமா, தாய், மாயா ஆகிய மூவரும் மாடிவீடு ஒன்றில் மூன்று வருடங்களாக ஒன்றாக வாழந்தனர். இது புனாகு கல்லூரியிலிருந்து மிக அண்மையில் தான் இருந்தது.

ஒபாமாவின் நண்பர்கள் வீட்டுக்கு வந்தால் அவர்களுக்கு உபசாரமாகக் கொடுக்க ஒன்றுமிராது. வீடும் ஒழுங்கின்றித் தலை கீழாகத் தான் இருக்கும்.


நண்பர்கள் இவற்றைக் குத்திக்காட்டி கிண்டல் செய்வது. அம்மாவின் காதில் விழும். அம்மா அப்போதெல்லாம் மகனை ஒரு பக்கம் அழைத்து தன் நிலையை அவனுக்குப் புரிய வைப்பாள். கணவன் இல்லாமல் தன்னந்தனியான தாயாக நின்று மகனையும் மகளையும் வளர்க்க எவ்வளவு துன்பப்படுகிறாள். மூன்று பேரின் உடை, உணவு, படிப்பு, வீடு அப்பப்பா! அதை விட அம்மாவும் மீண்டும் தன் கல்வியைத் தொடர்கிறாள்.

அதனால் தான் அவளால் வீட்டைக் கவனிக்கவோ அல்லது இடைத்தீன் ஏதேனும் செய்வதற்கு நேரம் செலவிடவோ முடியவில்லை.

கல்வி–அதுதான் அவளின் கருந்தனம். மற்றவையெல்லாம் புறந்தள்ளப்பட்டு விட்டன. அவளின் முன்னுரிமை கல்விக்குத்தான். இத்திட்டம் பற்றி யார் வேண்டுமானாலும் குறை கூறட்டும். அவள் அது பற்றிக் கவலை கொள்ளமாட்டாள். இதுதான் ஒபாமாவுக்கு விளங்க வேண்டுமாம்: (தொடரும்)

# தமிழக மீனவர்களின் பாதுகாப்பிற்கு கச்சதீவை மீட்பதுதான் ஒரே வழி

## டாக்டர் ராமதாஸ் அறிக்கை



(சென்னை)

தமிழக மீனவர்கள் மீன் பிடித்து பாதுகாப்பாக திரும்பிவர கச்சதீவு மீட்கப்படுவது ஒன்றுதான் வழி என்று டாக்டர் ராமதாஸ் கூறியிருக்கிறார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது,

இராமேஸ்வரம் மீனவர்கள் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் கடந்த இரண்டு தினங்களாக மீன்பிடிக்கச் செல்லாமல், வேலைநிறுத்தம் மேற்கொண்டு வருகிறார்கள். இலங்கைக் கடற்படையினரால், கடத்தப்பட்டு, துன்புறுத்தப்பட்டு வரும் 23 மீனவர்களை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தியும், இலங்கைக் கடற் படையினரால் தொடர்ந்து தமிழக மீனவர்கள் தாக்கப்பட்டு வருவதைத் தடுக்க தவறிவிட்டதைக் கண்டித்தும் இந்த உண்ணாவிரதம் நடந்து வருகிறது.

தமிழக மீனவர்கள் கடத்தப்படுவதும், அவர்களை குருவி சுடுவது போல இலங்கைக் கடற்படையினர் சுட்டுக் கொல்வதும் தொடர்ந்து நடந்துகொண்டிருக்கிறது. இதுவரையில் 500க்கும் மேற்பட்ட மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டிருக்கிறார்கள்.

தமிழர்களின் உயிரைவிட, அவர்களை காக்க வேண்டும் என்கிற அக்கறையை விட இலங்கை அரசின் நட்பு முக்கியம் என்ற நிலைப்பாட்டை இந்திய வெளிவிவகாரத்துறை தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. இதனை எத்தனையோ முறை சுட்டிக்காட்டியும் வெளிவிவகாரத்துறை தனது நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ள முன்வரவில்லை என்பது வேதனையான விஷயமாகும்.

தமிழக மீனவர்கள் அன்றாடம் தாக்கப்படுவதற்கும், சுட்டுக் கொல்லப்படுவதற்கும் இலங்கைக்கு கச்சதீவு 1974 ஆம் ஆண்டில் தாரை வார்க்கப்பட்டதே காரணம். இலங்கையில் ஈழத் தமிழர்கள் மீதான அடக்குமுறைகளை இலங்கை அரசு கட்டவிழ்த்து விட்டதற்கும், கச்சதீவு இலங்கைக்கு தாரை வார்க்கும் ஒப்பந்தம் தான் காரணம் என்றால் மிகையாகாது.

தமிழக மீன வர்கள் கச்சதீவு அருகே உரிமையுடன் மீன் பிடிக்கவும்,பாதுகாப்பாகத் திரும்பி வரவும் கச்ச தீவு மீட்கப்படுவது ஒன்றுதான் வழி. இதற்கும் தமிழகம் இழந்த இதர உரிமைகளைப் பெற வும் குரல் கொடுப்போர் யார்? என்பதை அறிந்து வரும் பாராளுமன்றத் தேர்தலில் தமிழக மக்கள் வாக்களித்து வெற்றிபெற வைக்கவேண்டும். இவ்வாறு டாக்டர் ராமதாஸ் அறிக்கையில் கூறியுள்ளார். (6)

# யமுனை நதியில் படகு கவிழ்ந்து 15 பேர் பலி

(பிஜால்பூர்)

உத்தர பிரதேச மாநிலம் -பிஜால்பூர் என்ற இடத்தில் யமுனை நதியில் சென்ற படகு கவிழ்ந்தது.

இந்த விபத்தல் படகில் இருந்த பக்தர்கள் 15 பேர் இறந்தனர்.

அந்தப் படகில் 40பேர் இருந்தனர். அக்கரையில் உள்ள கோயிலுக்கு அவர்கள் சென்று கொண்டு இருந்தபோது நடு ஆற்றில் படகு கவிழ்ந்தது.

இதில் 25 பேர் ஆற்றில் நீந்தி கரையேறி விட்டனர்.

ஏனையோர் ஆற்றில் மூழ்கி இறந்து விட்டார்கள்.

அத்துடன் இறந்தவர்களின் உடல்களை ஆற்றில் தேடும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (6)




# பாதுகாப்பதற்கான பொறுப்பை ஐ.நா.பயன்படுத்த வேண்டும்

## இந்திய பொது அமைப்பு கோரிக்கை

ஈழத் தமிழர்களின் விவ்காரத்தில் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணைக்குழு உடனடியாகத் தலையிட்டு தமிழர்கள் படுகொலை செய்யப்படுவதைத் தடுத்து நிறுத்துவதற்காக பாதுகாப்பதற்கான பொறுப்பு (Responsibility to Protect-R2P) என்ற கோட்பாட்டைப் பயன்படுத்த வேண்டும் என இந்தியாவின் முன்னணி சிவில் அரசியல் அமைப்பு ஒன்று கோரிக்கை விடுத் திருக்கின்றது.

பொது மக்களுக்கான மக்கள் ஒன்றியம் என்ற அமைப்பின் தலைவர் டாக்டர் வி.சுரேஸ் சென்னையில் ஊடகவியலாளர்கள் மத்தியில் உரையாற்றிய போதே இந்தக் கோரிக்கையை முன்வைத்தார்.

தமிழர்களுக்கு எதிராக இலங்கை அரசாங்கம் மேற்கொண்டுள்ள போருக்கு இந்திய மத்திய அரசு வழங்கிவரும் ஆதரவை நிறுத்திக் கொள்ள வேண்டும் எனவும் வலியுறுத்திய சுரேஸ், பயங்கரவாதத்துக்கு எதிரான போர் என்ற பெயரில் இலங்கை அரசாங்கத்திற்கு வழங்கி வரும் அனைத்து வகையான உதவிகளையும் இந்தியா நிறுத்திக் கொள்ள வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

இறைமையுள்ள ஒருநாட்டின் உள் விவகாரங்களில் தலையிட முடியாது எனக் கூறி இந்தப் பிரச்சினையில் இருந்து இந்திய அரசாங்கம் தொடர்ந்தும் தப்பித்துக்கொள்ள முடியாது எனக் குறிப்பிட்ட டாக்டர் சுரேஸ்,குறிப்பிட்ட நாடொன்று அதன் குடிமக்களைப் பாதுகாத்துக்கொள்வதற்குத் தவறும் பட்சத்தில் பாதுகாப்பதற்கான பொறுப்பு என்ற கோட்பாட்டைப் பயன்படுத்திக் கொண்டு இறைமையுள்ள நாடொன்றின் உள்விவகாரங்களில் ஐ.நா.தலையிட முடியும் என சுட்டிக் காட்டினார். (6)

# தி.மு.க.-காங்கிரஸ் கூட்டணியை தோற்கடிப்பதன் மூலமே தமிழர் நலன்களை பாதுகாக்க முடியும்

## பழ.நெடுமாறன் தெரிவிப்பு



(சென்னை)

தமிழர் நலனுக்கு எதிராக இருக்கின்ற காங்கிரஸ்– திமுக கூட்டணியை மக்களவைத் தேர்தலில் வெற்றிபெற விடக்கூடாது. அவர்களை வீட்டுக்கு அனுப்பவேண்டும் என்று தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ.நெடுமாறன் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசிய அமைப்புகள், முற்போக்கு இயக்கங்கள் உள்ளிட்ட அமைப்புக்களின் சார்பில் மக்களவைத் தேர்தலில் தமிழர் கடமை -கலந்தாய்வுக் கூட்டம் திருச்சியில் சனிக்கிழமை நடைபெற்றது.

கூட்டத்துக்குத் தலைமை வகித்த நெடுமாறன் மேலும் பேசியதாவது,

இலங்கைத் தமிழர் பிரச்சினையைத் தீர்க்க நடவடிக்கை எடுப்பதாக தமிழக முதல்வர் கருணாநிதிக்கு பிரதமர் மன்மோகன் சிங்கும், காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தியும் கடிதம் எழுதுகிறார்கள். அவர்கள் கடிதம் எழுதவேண்டியது கருணாநிதிக்கு அல்ல, இலங்கை அதிபர் ராஜபக்ஷவுக்குத்தான். எத்தனை காலம் தான் நம்மை ஏமாற்றுவார்கள்.

மக்களவைத் தேர்தல் திகதி அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், நாம் விறுவிறுப்பாகச் செயல்பட வேண்டிய நேரமிது. காங்கிரஸ் - திமுக கூட்டணியை மக்களவைத் தேர்தலில் வெற்றிபெற விடக் கூடாது. அவர்கள் வெற்றி பெறுவார்களேயானால் தமிழர் உணர்வுக்குத் துரோகம் செய்தவர்களாக ஆகிவிடுவோம்.

தேர்தலில் அவர்கள் ரூ.500 கோடி முதல் ஆயிரம் கோடி வரை செலவு செய்யட்டும். ஆனால், மக்கள் சக்தியின் முன் அவர்களால் ஒன்று செய்யமுடியாது என்றார் பழ. நெடுமாறன்.

இந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களாவன,

இலங்கை அரசுக்குத் தேவையான ஆயுத, நிதியுதவி, இராணுவத் தொழில்நுட்ப உதவி போன்றவற்றைத் தொடர்ந்து அளித்து, இந்தப் போரை பின்னின்று நடத்தும் இந்திய அரசும், இதனைத் தடுத்து நிறுத்த தமிழக அரசும் எந்த விதமான நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லை.

இந்த நிலையில், மக்களவைத் தேர்தலில் மீண்டும் கூட்டணி சேர்ந்துள்ள காங்கிரஸ் - திமுக கூட்டணியை தோற்கடிப்பதன் மூலமே ஈழத் தமிழர்களின் நலன்கள் மட்டுமல்லாமல், தமிழக மக்களின் நலன்களையும் நம்மால் பாதுகாக்க முடியும் என்பதால் பொதுமக்கள் திமுக கூட்டணிக்கு எதிராக வாக்களிக்க வேண்டும். (6)

# இலங்கை கடற்படையை கண்டித்து இராமேஸ்வரம் மீனவர்கள் வேலை நிறுத்தம்

(சென்னை)

இலங்கைக் கடற்படையை கண்டித்து, இராமேஸ்வரம் மீனவர்கள் கடந்த வெள்ளிக்கிழமை முதல் காலவரையறையற்ற வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

இராமேஸ்வரத்திலிருந்து புதன்கிழமையன்று 6 படகுகளில் மீன்பிடிக்கச் சென்ற 23 மீனவர்களை இலங்கைக் கடற்படை கைது செய்தது. இதனால், இராமேஸ்வரம் மீனவர்களிடையே கொந்தளிப்பு ஏற்பட்டுள்ளது.

இராமேஸ்வரத்தில் மாவட்ட மீனவர் சங்கத் தலைவர் அல்போன்ஸ் தலைமையில் அனைத்து மீனவ சங்க பிரதிநிதிகளின் கூட்டம் நடந்தது. இதில் இராமேஸ்வரம் மீனவர்கள் 23 பேரையும், 6 படகுகளையும் உடனடியாக விடுவிக்க வேண்டும். இந்தியக் கடற்படையால் கைதுசெய்யப்பட்ட இலங்கை மீன வர்களையும் விடுக்க வேண்டும்.

1974 ஆம் ஆண்டு செய்யப்பட்ட கச்சதீவு ஒப்பந்தப்படி, இருநாட்டு மீனவர்களும் இரு நாட்டு கரையோரம் வரை சென்று மீன்பிடிக்க அனுமதிக்க வேண்டும்.

இந்தக் கோரிக்கைகள் நிறைவேறும் வரை காலவரையறையற்ற வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவோம் என்று தீர்மானம் நிறை வேற்றப்பட்டது. இதையடுத்து, இராமேஸ்வரத்தில் 700 விசைப் படகுகளின் படகோட்டிகள் கடந்த வெள்ளிக்கிழமை முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

இராமேஸ்வரம் மீனவர் சங்க தலைவர் தேவதாஸ் கூறுகையில், "இலங்கை மீனவர்களை இந்தியக் கடற்படை கைது செய்தது. அதற்குப் பழிவாங்கும் நடவடிக்கையாக இலங்கைக் கடற்படை இராமேஸ்வரம் மீனவர்களை கைதுசெய்துள்ளது. இந்நிலை தொடர்ந்தால், பிழைக்க வேறு மாவட்டங்களுக்குச் செல்வதைத் தவிர வேறுவழியில்லை" என்றார். (6)

# தே.மு.தி.க தேர்ந்தெடுக்கப்பட்டால் காவிரி முதல் கச்சதீவு பிரச்சினை வரை தீர்வு காணப்படும்

## விஜயகாந்த் அறிக்கை



(சென்னை)

தே.மு.தி.க தேர்ந்தெடுக்கப்பட்டால் காவிரி பிரச்சினை முதல் கச்சதீவு பிரச்சினை வரை தீர்வுகாணப்படும் என்று விஜயகாந்த் கூறியுள்ளார்.

இதுகுறித்து தே.மு.தி.க தலைவர் விஜயகாந்த் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது,

தே.மு.தி.க முதன் முதலாக பாராளுமன்ற தேர்தலை சந்திக்கிறது. இதர அரசியல் கட்சிகள் கூட்டணி அமைத்து போட்டியிடுகின்றன. ஆனால், தே.மு.தி.க. மக்களையும், தெய்வத்தையும் நம்பி தமிழ்நாட்டு மக்களின் சார்பாக இந்தத் தேர்தலை சந்திக்கிறது.

தமிழ்நாட்டைச் சேர்ந்த தி.மு.க., அ.தி.மு.க காங்கிரஸ் போன்ற கட்சிகள் மத்திய அரசில் இடம் பெற்றும், தமிழ்நாட்டிற்கு இழைக் கப்பட்ட அநீதிகள் தொடர்ந்த வண்ணம் தான் உள்ளன. தே.மு.தி.க தமிழக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டால் இதுவரை தீர்க்கப்படாத காவிரி பிரச்சினை முதல் கச்சதீவு பிரச்சினை வரை அத்தனை பிரச்சினைகளையும் தீர்க்கப் பாடுபடுவோம் என்று அவ்வ றிக்கையில் கூறியுள்ளார். (6)

# ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் இணைவதற்கு அமெரிக்கா தீர்மானம்



ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் ஆசனமொன்றைப் பெறுவதற்கு அமெரிக்கா முயற்சிக்கிறது. இதற்காக எதிர்வரும் மே மாதம் நடைபெறவுள்ள தேர்தலில் அமெரிக்கா பங்கு பற்றவுள்ளதாக அமெரிக்க ராஜாங்கச் செயலாளர் ஹிலாரி கிளின்டன் தெரிவித்துள்ளார்.

ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலை புறக்கணிக்கும் முன்னாள் ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ்ஷின் கொள்கைக்கு முரணாக அதில் அங்கத்துவம் வகிப்பதற்கு பராக் ஒபாமா நிர்வாகம் தீர்மானித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

2006 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் 47 ஆசனங்கள் உள்ளன.

மேற்கு ஐரோப்பா மற்றும் ஏனைய நாடுகள் பிரிவிற்கான மூன்று அங்கத்தவர்களை தெரிவு செய்வதற்காக எதிர்வரும் மே மாதம் நடைபெறவுள்ள தேர்தலில் அமெரிக்கா பங்குபற்றவுள்ளது.

பெல்ஜியம், நோர்வே ஆகியனவற்றுடன் அமெரிக்காவும் போட்டியின்றி தெரிவு செய்யப்படுவதற்கு வாய்ப்பளிக்கும் வகையில் தான் போட்டியிலிருந்து விலகிக் கொள்ளத் தயார் என நியூஸிலாந்து அறிவித்துள்ளது.

அமெரிக்காவின் உலகளாவிய வெளிநாட்டுக் கொள்கையில் மனித உரிமைகள் விவகாரம் முக்கிய அங்கமாகும். ஐ.நா. மனித உரிமைகள் பிரகடனத்தின் குறிக்கோள்களை அடைவதற்காக ஐ.நா. மனித உரிமைகள் கட்டமைப்பை முன்னேற்றுவதற்கு நாம் ஏனைய நாடுகளுடன் இணைந்து பணியாற்றுவோம் என ஹிலாரி கிளின்டன் கூறியுள்ளார்.

மனித உரிமைகள் கவுன்ஸிலில் அமெரிக்கா இணையத் தீர்மானித்துள்ளமை ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கி. மூன் மற்றும் மனித உரிமைக்குழுக்களின் வரவேற்பைப் பெற்றுள்ளது. (6)


# கியூபா நாட்டினர் மீதான தடைகளை இரத்துச் செய்ய ஒபாமா திட்டம்

(வோஷிங்டன்)

அமெரிக்காவுக்கும், கம்யூனிஸ்ட் நாடான கியூபாவுக்கும் பல ஆண்டுகளாக மோதல் இருந்து வந்தது. இதனால் கியூபா நாட்டின் மீது பொருளாதார தடை உட்பட பல்வேறு தடைகளை அமெரிக்கா விதித்து இருந்தது.

ஒபாமா ஜனாதிபதி பதவிக்கான தேர்தல் பிரசாரத்தின் போது, கியூபா மீதான தடைகளை தளர்த்தப்போவதாக அறிவித்தார்.

அதன்படி அமெரிக்காவில் வசிக்கும் கியூபா நாட்டினர் தங்கள் சொந்த நாட்டுக்கு செல்வதற்கு இருந்த தடையை இரத்து செய்யவும், அவர்கள் கியூபா நாட்டுக்கு பணம் அனுப்புவதற்கு இருந்த தடையை இரத்து செய்யவும் ஒபாமா திட்டமிட்டு இருக்கிறார்.




கியூபாவுடன் உள்ள வர்த்தக தடை தொடர்ந்து நீடிக்கும் என்றும், அதை இரத்து செய்யும் எண்ணம் இல்லை என்றும் அமெரிக்கா தெரிவித்துள்ளது. (6)

# பாகிஸ்தானில் பயங்கரவாதம் அதிகரிக்க முஷாரப்பே காரணம்

## நவாஷ்ஷெரீப் தெரிவிப்பு

(லாகூர்)

பாகிஸ்தானில் பயங்கரவாத நடவடிக்கைகள் பெருகி வருவதற்கு முன்னாள் அதிபர் முஷாரப்பே காரணம் என பாகிஸ்தான் முஸ்லிம் லீக் கட்சித் தலைவர் நவாஸ் ஷெரீப் கூறியுள்ளார்.



பாகிஸ்தானின் முன்னாள் பிரதமரான அவர் கூறியதாவது,

பாகிஸ்தானில் பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு அடித்தளம் அமைத்தவர், முஷாரப். அவரது ஒன்பது ஆண்டு ஆட்சியில் தான் பயங்கரவாதம் வளர்ந்தது. மக்களாட்சி முறை இருந்த வரை, பாகிஸ்தானில் பயங்கரவாதம் தற்கொலைப் படை தாக்குதல் போன்ற சம்பவங்கள் நடக்க வில்லை.

அதன் பின்னரே இந்தப் பிரச்சினைகள் உருவாகியுள்ளன. பயங்கரவாதத்தை வேரோடு அழிக்க வேண்டிய முஷாரப், அது வளர்வதற்கு பாகிஸ்தானை தகுந்த இடமாக மாற்றினார்.

இந்த செயலை யாரும் அங்கீகரிக்க முடியாது. பயங்கரவாதத்தால் பாதிக்கப்பட்டு அதற்கு இரையாகிறோம். மக்களாட்சி நிலவ நான் பாடுபடுவேன். சட்டத்திற்காகவும, நீதிக்காகவும் இறுதிவரை போராடுவேன். ஐ.எஸ்.ஐ, அமைப்பு பயங்கரவாத செயல்களில் ஈடுபடவோ, உதவவோ வாய்ப்பில்லை.

உள் நாடு மற்றும் நட்பு நாடுகளில் ஏற்படும் பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு ஐ.எஸ்.ஐ அமைப்பு உதவுவதாக கூறுவதில் எனக்கு நம்பிக்கை இல்லை என்றார். (6)

# கொள்கலனில் சென்றவர்களில் 43 பேர் மூச்சுத்திணறி மரணம்

(குயட்டா)

ஆப்கானிஸ்தானில் இருந்து ஈரான் செல்லும் வழியில் பாகிஸ்தானில் உள்ள குயட்டா நகருக்கு ஒரு டிரக் வந்தது. அதில் இருந்த கொள்கலனில் இருந்து உதவி கோரி கூக்குரல் கேட்டது.

அதை திறந்து பார்த்தபோது, உள்ளே 43 பேர் பிணமாகக் கிடந்தனர். மீதி ஆட்களில்



பெரும்பாலானோர் மயக்க நிலையில் இருந்தனர்.

அவர்களை கொள்கலனில் மறைத்து வைத்து ஈரான் நாட்டுக்கு கடத்திச் செல்வது தெரிய வந்தது. இதில் மூச்சுத் திணறி 43 பேர் பலியாகி இருப்பதும் தெரிய வந்தது. (6)

# தேசிய பாதுகாப்பு சட்டத்தில் கைதானோரை விடுவிக்க மலேஷிய பிரதமர் உத்தரவு

(சிங்கப்பூர்)

மலேசியாவில், இண்ட்ராப் தலைவர்கள் இருவர் உட்பட தேசியப் பாதுகாப்புச் சட்டத்தில் கைது செய்யப்பட்ட 13 பேரை விடுவிக்கும்படி பிரதமர் நஜீப் உத்தரவிட்டுள்ளார்.

மலேசியாவில் ஆளுங்கட்சியில் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக பிரதமராக இருந்த அப்துல்லா அகமது படாவி, தன் பதவியை ராஜினாமா செய்தார்.

புதிய பிரத மராக நஜீப் ரசாக் கடந்த வெள்ளிக்கிழமை பதவியேற்றுக் கொண்டார். இந்நிலையில், மலேசியாவில் பல்வேறு புகார்களுக்காக தேசியப் பாதுகாப்புச் சட்டத்தில் கைது செய்யப்பட்ட 13 பேரை விடுதலை செய்யும்படி பிரதமர் நஜீப் உத்தரவிட்டுள்ளார்.

இந்த 13 பேரில் 2007 ஆம் ஆண்டில் கைது செய்யப்பட்ட இண்ட்ராப் தலைவர்கள் கணபதி ராஜு, கங்காதரன் ஆகியோரும் அடங்குவர். இவர்கள் மலேசியாவில் வசிக்கும் இந்திய வம்சாவளியினருக்கு சம உரிமை அளிக்க வலியுறுத்தி போராட்டம் நடத்தியதற்காக கைது செய்யப்பட்டவர்கள். இவர்கள் தவிர சுந்தரராஜ விஜய் என்ற இந்தியரும் விடுவிக்கப்பட்டுள்ளார். பிரதமர் நஜீப்பின் இந்த நடவடிக்கையை மலேசிய இந்திய காங்கிரஸ் தலைவர் டத்தோ சாமிவேலு வரவேற்றுள்ளார்.

இதற்கிடையே மலேசிய ஆளுங்கட்சியில் இருந்து கருத்து வேறுபாடு காரணமாகப் பிரிந்து சென்ற முன்னாள் பிரதமர் மகாதிர் முகமது தற்போது மீண்டும் அக்கட்சியில் சேர்ந்துள்ளார். அகமது படாவி பிரதமர் பதவியில் இருந்து விலகியதன் காரணமாகவே மகாதிர் முகமது மீண்டும் கட்சியில் சேர்ந்துள்ளார் என ஆளுங்கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன. (6)

# நியூயோர்க் குடியேற்ற சேவை மீதான தாக்குதலுக்கும் தலிபான்கள் பொறுப்பேற்பு

## அமெரிக்காவின் தாக்குதலுக்கு பதிலடி என்கிறார் தலிபான் தலைவர்

(இஸ்லாமாபாத்)

அமெரிக்காவின் நியூயோர்க் மாகாண குடியேற்ற சேவை அலுவலகத்தில் நடந்த தாக்குதலுக்கு தாங்களே காரணம் என, பாகிஸ்தானில் உள்ள தலிபான் தலைவர் பைதுல்லா மெக்சூத் அறிவித்துள்ளார். அமெரிக்காவின் தாக்குதலுக்கு பதிலடியாகவே இதை செய்துள்ளதாகவும் கூறியுள்ளார்.

அமெரிக்காவின் நியூயோர்க் மாகாணத்தின் மேற்கு பகுதியில் உள்ள பிங்காம்டன் நகர குடியேற்ற சேவை அலுவலகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இரண்டு கைத்துப்பாக்கிகளுடன் புகுந்த மர்ம மனிதன் ஒருவன் அங்கிருந்தவர்களை நோக்கி கண்மூடித்தனமாக சுட்டான். உடன் பலர் அலறி அடித்து வெளியே ஓடிவந்தனர். மற்ற சிலர் மறைவான இடங்களில் பதுங்கினர். இருந்தும் இந்த பயங்கர சம்பவத்தில் 14 பேர் கொல்லப்பட்டனர்.

மேலும் 50 பேரை பிணைக் கைதியாக பிடித்த அவன், பின் தன்னைத் தானே சுட்டு தற்கொலை செய்து கொண் டதாக தெரிவிக்கப்பட்டது. அவன் வியட்நாம் வம்சாவளியைச் சேர்ந்தவன் என்றும் அமெரிக்க நிர்வாகத்தினர் கூறினர்.

இந்நிலையில், நியூயோர்க் மாகாணத்தில் குடியேற்ற சேவை அலுவலகத்தில் நடந்த தாக்குதலுக்க, தலிபான்களே காரணம் என பாகிஸ்தானில் உள்ள தலிபான் தலைவர் பைதுல்லா மெக்சூத் கூறியுள்ளார்.

தெக்ரிக் - இ - தலிபான் பாகிஸ்தான் அமைப்பின் தலைவரான பைதுல்லா மெக்சூத், அமெரிக்கா நடத்தும் ஏவுகணை தாக்குதலுக்கு பதிலடி கொடுக்க இதுபோன்று மேலும் பல தாக்குதல்கள் தொடரும் என சில நாட்களுக்கு முன்னரே தெரிவித்தேன் என்றும் கூறினார்.

பாகிஸ்தானில் பழங்குடியினர் வசிக்கும் வடக்கு வாசீரிஸ்தான் பகுதியில் அமெரிக்கப் படைகள் நேற்று முன்தினம் ஏவுகணைத் தாக்குதல் நடத்தின. இந்தச் சம்பவத்தில் பெண்கள், குழந்தைகள் உட்பட 13 பேர் பலியாயினர். இந்தத் தாக்குதல் நடந்த அடுத்த சில மணி நேரத்தில் மெக்சூத் தன் அறிவிப்பை வெளியிட்டுள்ளார். பாகிஸ்தானின் லாகூர் நகர் அருகே மனாவன் என்ற இடத்தில் உள்ள பொலிஸ் பயிற்சி மையம் மீது நடத்திய தாக்குதலுக்கும் தாங்களே காரணம் என, மெக்சூத் சமீபத்தில் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.


ஆனால் நியூயோர்க் தாக்குதலுக்கு தாங்களே காரணம் என தலிபான் தலைவர் வெளியிட்ட அறிவிப்பு நம்ப முடியாதது என நிபுணர்கள் கூறியுள்ளனர். (6)

## உலக தரிசனம்

# அமெரிக்க படையினரின் தாக்குதலில் 13 தீவிரவாதிகள் பலி

(பெஷாவர்)

பாகிஸ்தானின் வடமேற்கு பகுதியில் ஆளில்லா விமானம் மூலம் அமெரிக்கப்



படையினர் நேற்று முன்தினம் நடத்திய ஏவுகணைத் தாக்குதலில் அந்நிய நாட்டு தீவிரவாதிகள் 13 பேர் பலியாகினர்.

இது தொடர்பாகப் பாதுகாப்பு அதிகாரிகள் கூறுகையில்,

ஆப்கானிஸ்த்தான் எல்லைப் பகுதியில் அமைந்துள்ள பாகிஸ்தானின் வடக்கு வாசீரிஸ்டான் பகுதிஅல்-கொய்தா மற்றும் தலிபான் தீவிர வாதிகள் ஆதிக்கம் நிறைந்தது. இங்குள்ளமிரான்ஷா நகரில் ஒரு வீட்டில் சில விருந்தினர்கள் தங்கியிருந்தனர். அந்த வீட்டைக்குறி வைத்து அமெரிக்கப் படையினர் ஆளில்லா விமானம் மூலம் ஏவுகணைத் தாக்குதல் நடத்தினர். இந்தத் தாக்குதலில் தீவிரவாதிகள் உட்பட 13பேர் உயிரிழந்தனர் என்றனர்.

இதேபோல் வடக்கு வாசீரிஸ்தானின் மற்றொரு பகுதியில் நடந்த தற்கொலைப் படைத் தாக்குதலில் 17 பேர் பலியாகினர்.

இங்குள்ள பன்னு பகுதியில் இருந்து மிரான்ஷா நோக்கிச் சென்ற பாதுகாப்புப் படையினரின் வாகன அணி வகுப்பு மீது தற் கொலைப்படை தீவிரவாதி தாக்குதல் நடத்த முயன்றான்.

வெடி குண்டுகள் நிரப்பப்பட்ட காரில் வந்த அவனை பாதுகாப்புப் படையினர் சுட்டனர். உடன் அவன் காரிலிருந்த வெடி குண்டுகளை வெடிக்கச்செய்ததில் ஐந்து குழந்தைகள் உட்பட 17 அப்பாவிகள் உயிரிழந்தனர். 30 பேர் படுகாயமடைந்தனர். மக்கள் நெருக்கம் மிகுந்த சந்தைப் பகுதியில் இந்தத் தாக்குதல் நடந்ததால் உயிரிழப்புஅதிகம் ஏற்பட்டது. (6)

# புல்மோட்டை வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுவோரின் விபரங்கள் வெளியிடப்படும்-அமைச்சர் மஹிந்த சமரசிங்க

(கொழும்பு)

புதுமாத்தளன் வைத்தியசாலையில் இருந்து காயமடைந்த நிலையில் கப்பலில் கொண்டுவரப்பட்டு புல்மோட்டை வைத்திய சாலையில் அனுமதிக்கப்படுவோரின் பெயர் விபரங்களை வெளியிடுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்திருப்பதாக மனித உரிமைகள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்தார்.

புல்மோட்டை வைத்தியசாலையில் அனுமதிக்கப்படும் காயமடைந்தவர்களின் பெயர் விபரங்களை வெளியிடாமை தமக்கு பெரும் சந்தேகத்தை ஏற்படுத்துவதாக தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் கே.துரைரெட்ணசிங்கம் தெரிவித்துள்ளமை தொடர்பாக அமைச்சர் மஹிந்த சமரசிங்கவிடம் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

காயமடைந்தவர்களின் பெயர் பட்டியல் வெளியிடாமை குறித்து நாடாளுமன்ற உறுப்பினர் கே.துரைரெட்ணசிங்கம் மேலும் கூறியதாவது,

புல்மோட்டை வைத்தியசாலையில் நூற்றுக் கணக்கானோர் படுகாயமடைந்த நிலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர்களை பார்ப்பதற்கு அனுமதி வழங்கப்படுவதில்லை இந்த நிலையில் பெயர்ப்பட்டியலும் வெளியிடப்படுவதில்லை இந்த நடைமுறையினால் நோயாளர்களின் உறவினர்கள் பரிதவிக்கின்றனர் .

இது அப்பட்டமான மனித உரிமை மீறலாகும் இதனை சம்பந்தப்பட்ட அமைச்சர்களின் கவனத்திற்கு கொண்டுவந்துள்ளேன் நோயாளர் தொடர்பான இரகசிய நடைமுறை எம்மை சந்தேகத்திற்கு உட்படுத்தியுள்ளது.

புதுமாத்தளன் வைத்தியசாலையில் இருந்து அழைத்து வரப்பட்டவர்களில் அறுபது பேர் இதுவரை மரணமடைந்துள்ளனர்.

திருகோணமலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட வர்களில் 44 பேரும் புல்மோட்டை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர்களில் 16 பேருமே இவ்வாறு மரணமடைந்தவர்கள் ஆவர்.

வெளி உலகிற்கு காயமடைந்தவர்களின் எண்ணிக்கையை மறைப்பதற்காகவே பெயர்ப்பட்டியல் வெளியிடப்படுவதில்லை என நினைக்க தோன்றுகிறது என்றார்.

இது குறித்து அமைச்சர் மஹிந்த சமரசிங்க கூறியதாவது,

பெயர் பட்டியலை வெளியிட வேண்டியது முக்கியமானதாகும். பெயர்ப்பட்டியலை வெளியிட வேண்டாம் என அரசாங்கம் உத்தரவு எதனையும் பிறப்பிக்கவில்லை.

காயமடைந்தவர்களின் பெயர்ப் பட்டியலை உடனடியாக வெளியிடுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளேன் என்றார். (6)

## ஹெரோயின் கடத்திய இருவருக்கு ஆயுட்கால் சிறை

(கொழும்பு)

இலங்கைக்கு பெருமளவு ஹெரோயின் போதைப் பொருளை கடத்தி வந்த இருவருக்கு நீர்கொழும்பு நீதிமன்றத்தில் வெள்ளிக்கிழமை ஆயுட்கால சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இந்தியப் பிரஜை ஒருவருக்கும் பாகிஸ்தான் பிரஜை ஒருவருக்குமே இவ்வாறு ஆயுட்கால சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.


கடந்த சில வருடங்களுக்கு முன்னர் இவ்விருவரும் பெருமளவு ஹெரோயின் போதைப் பொருள் பைக்கெற்றுக்களை விமானம் மூலம் இலங்கைக்கு கடத்தி வந்த போது கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டு இவர்களிடமிருந்து ஹெரோயின் போதைப் பொருள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டிருந்தது இவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டு வந்த நிலையில் நீதிமன்றம் இவ்விருவருக்கும் ஆயுட்கால சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பு வழங்கியுள்ளது. (6)

# சொந்த இடங்களுக்கு செல்லவே நாங்கள் விரும்புகிறோம்

## ஐ.நா. அதிகாரியிடம் இடம்பெயர்ந்த மக்கள் முறையீடு

(வவுனியா)

முகாம்களில் எமக்கு வசதிகள் இருந்த போதும் எமது சொந்த இடங்களுக்கு செல்லவே நாங்கள் விரும்புகிறோம் என வுவுனியாவுக்கு நேற்று முன்தினம் விஜயம் செய்த இடம்பெயர்ந்த மக்கள் தொடர்பான ஐ.நா. செயலாளர் நாயகத்தின் பிரதிநிதி பேராசிரியர் வோல்டர் கெலினிடம் அங்குள்ள மக்கள் தெரிவித்துள்ளனர். பேராசிரியர் வோல்டர் கெலினுடன் அமைச்சர் றிசாட்பதியூதீன் வவுனியா அரசாங்க அதிபர் திருமதி பி.எஸ். எம். சாள்ஸ் ஆகியோரும் நலன்புரி முகாம்களுக்கு விஜயம் செய்தனர்.அங்கு ஐ.நா. பிரதிநிதி அம் மக்களின் குறைகளைக் கேட்டறிந்து கொண்டார். அப்போதே அவர்கள் தங்கள் சொந்த இடங்களில் மீண்டும் குடியேற விரும்புவதாக தெரி வித்தனர். நலன்புரி முகாம்களுக்கான விஜயத்தை முடித்துக் கொண்ட அவர் வவுனியா செயலகத்தில் உயர் மட்ட மாநாடு ஒன்றை நடத்தி இடம்பெயர்ந்த மக்களுக்கான தேவைகள் குறித்து ஆராய்ந்தார். பின்னர் வவுனியா இராணுவ கட்டளைத் தலைமையகத்திற்கு விஜயம் செய்து இராணுவ உயர் அதிகாரிகளுடன் பேச்சு வார்த்தை நடத்தி விட்டு நேற்று முன் தினம் மாலையே கொழும்பு திரும்பினார் (6)




பன்னாலை கனகசபை வித்தியாலயத்தில் 15 ஆண்டுகளுக்குப் பின்னர் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவன் ரா. ஜினோத் ராஜுக்கு லண்டன் பழைய மாணவர் சங்க அனுசரணையுடன் துவிச்சக்கர வண்டியொன்று பரிசாக வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் வலிகாமம் கல்வி வலயப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன், வித்தியாலய அதிபர் சி.சிவராஜன், ஆகியோர் மாணவனிடம் துவிச்சக்கரவண்டியை கையளிப்பதையும், அருகில் உப அதிபர் க. சிவபாலன் மற்றும் ஆசிரியர்களையும் படத்தில் காணலாம்.




வலிகாமம் கல்வி வலய முறைசாராக் கல்விப் பிரிவால் அண்மையில் ஆனைக்கோட்டை முள்ளி கரைப்பிரான் ஆதி விநாயகர் ஆலய பொதுமண்டபத்தில் பெற்றோர், பிள்ளைகளுக்கான கல்வி விழிப்புணர்வு செயற்றிட்டம் நடத்தப்பட்டது.
இந்நிகழ்வில் வலிகாமம் கல்வி வலய முறைசாரா கல்வி செயற்றிட்ட அலுவலர் ந. சண்முகராஜா உரையாற்றுவதையும், எழுத்தறிவூட்டல் ஆசிரியர் த.மகாதேவன், பாலசுப்பிரமணிய வித்தியாலய அதிபர் ந. சிவகடாட்சம் கோட்டக்கல்விப் பணிப்பாளர் சி. கந்தசாமி, சண்டிலிப்பாய் பிரதேச செயலர் திருமதி றூபினி வரதலிங்கம், பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி ச. நாகராஜா, ஆனைக்கோட்டை றோ.க. பாடசாலை அதிபர் திருமதி ந. சந்திரகுமார், கிராம அலுவலர் திருமதி சி.பிறேசிலா, தென்மராட்சி வலய செயற்றிட்ட அலுவலர் அ.சிவரூபன் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.



கைதடி, நவற்குழி அ.த.க வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டியில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட கியூடெக் கரித்தாஸ் நிறுவன இணைப்பாளர் செல்வி மரியரட்ணம் பத்மசேகரி மங்கல விளக்கேற்றுவதை படத்தில் காணலாம். அருகில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட முன்னாள் கோட்டக் கல்விப்பணிப்பாளர் நா. சத்தியநாதன், வித்தியாலய அதிபர் சி.சோமசுந்தரம் ஆகியோர் காணப்படுகின்றனர்.



இமையாணன் சிறி முருகன் அறநெறிப் பாடசாலையின் பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றது! இதில் இமையாணன் சிறுவர் கலைக்கூட சிறார்களின் காத்தவராயன் சிந்து நடைக்கூத்தின் ஒரு பகுதியை படத்தில் காண்கிறீர்கள். (படம் : கொழும்புத்துறை நிருபர்)

காணப்படும் உலகம் வேறு, அறியப்படும் உலகம் வேறு.

– பிளேட்டோ

வலம்புரி

## இன்று கப்பல் ஓடுமா?

'இன்று கப்பல் சேவை இடம்பெறும்' இந்த செய்திக்கு இருக்கக் கூடிய மவுசு ஏராளம். இதனால் யாழ். குடாநாட்டு பத்திரிகைகளின் முன் பக்கத்தில் கப்பல் செய்தி இடம்பிடித்து விடுகிறது.

இது மட்டும் தானா மவுசுக்கு காரணம் என்றால் இல்லை என்று சொல்லிவிடலாம். தற்போது யாழ். மாவட்டத்திற்கும் வெளிமாவட்டத்திற்கும் இடையிலான போக்குவரத்தில் கப்பல் சேவையே கைகொடுக்கும் சேவையாக இருக்கிறது.

இதனால் கப்பல் பயணம் இடம்பெற வேண்டும் என்பதற்கான பிரார்த்தனைகள் ஏராளம்.

ஒவ்வொரு நாளும் பத்திரிகை அலுவலகத் தொலைபேசியில் இன்று கப்பல் ஓடுமா? என்று கேட்பவர்களின் தொகை அதிகரித்துக் கொண்டே போகிறது.

இவ்வாறு தொலைபேசியில் அவர்கள் கேட்பதும், அது பற்றி இன்னமும் தகவல் கிடைக்கவில்லை எனப் பதில் அளிப்பதும் பெரியவிடயமல்ல.

ஆனால் இன்று கப்பல் ஓடுமா? என்று தொலைபேசியில் கேட்கும்போது அதில் இருக்கக் கூடிய ஏக்கம் மிகவும் வேதனைக்குரியது.

எத்தனையோ தேவைகள் கருதி வெளி மாவட்டங்களுக்குச் செல்லவேண்டியுள்ளது.

ஆனால் ஒழுங்கான போக்குவரத்துச் சேவை இன்மையால் மக்கள் பெரும் துன்பப்படுகின்றனர்.

அவசரமான பயணங்கள் கூட, பயண அனுமதிப்பத்திரத்தை பெற்றுக் கொள்வதிலும், விமானம் மற்றும் கப்பல் சேவையின் கிடைப்பனவின்மையாலும் முடியாது போய்விடுகிறது.

ஏ-9 பாதை திறக்கப்பட்டு மக்கள் போக்குவரத்திற்கு ஏற்பாடு செய்யப்படும், யாழ்தேவி வருவதற்குப் பச்சைக்கொடி காட்டுவதுதான் பாக்கி என்றெல்லாம் செய்திகள் வெளிவரும் போது கப்பலுக்காகக் காத்திருக்கும் படலம் தொடர்வது எதற்காக?

முல்லைத்தீவில் காயமடைந்தவர்களை ஏற்றி இறக்கும் பணி அவசரமும் அவசியமுமானதாகும்.

அந்த மனிதாபிமானப் பணிக்காக அரசு விசேட கப்பல் சேவையை ஏற்பாடு செய்ய வேண்டும். மக்களை பாதுகாப்போம். தமிழ் மக்கள் எல்லா உரிமைகளும் பெற்று வாழ வழி செய்வோம் என்று உலகின் செவிகளில் உரக்கச் சொல்வோர் காயமடைந்த மக்களை காப்பாற்ற –அவர்களுக்கு அவசர சிகிச்சை அளிக்க எந்நேரமும் கப்பல் சேவையை தயாராக வைத்திருக்க வேண்டுமல்லவா?

இதை விடுத்து காங்கேசன்துறை–திருமலை பயணிகள் கப்பலை அங்கொரு நாள் இங்கொரு நாள் என்று ஒதுக்கீடு செய்வது நியாயமற்ற செயலாகும்.

காங்கேசன்துறைக்கும் திருகோணமலைக்குமான வழமையான கப்பல் சேவை தொடரும் அதேநேரம், முல்லைத்தீவுக்கான விசேட கப்பல் சேவையை ஏற்பாடு செய்வது அரசின் கடமை.

இதை வலியுறுத்துவது நாடாளுமன்ற பிரதிநிதிகளின் தலையாய கடமை.

# வன்னி பாதுகாப்பு வலயப் பகுதிகளுக்குள் 5 முனைகளில் பிரவேசிக்க படையினர் திட்டம்

## கொழும்புத் தகவல்கள் தெரிவிப்பு

முல்லைத்தீவு மாவட்டத்தில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருக்கும் மக்கள் பாதுகாப்பு வலயம் என அரசாங்கத்தினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள கடற்கரைப் பகுதிக்குள் ஐந்து முனைகளில் ஒரே வேளையில் தாக்குதல்களை நடத்திக் கொண்டு உட் பிரவேசிப்பதற்கு படையினர் தயாராகி இருப்பதாக களமுனை மற்றும் கொழும்பு படைத் தலைமையக வட்டாரச் செய்திகள் தெரிவிக்கின்றன.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் இருந்த பச்சைப் புல்மோட்டைப் பகுதி கடுமையான மோதல்களைத் தொடர்ந்து கடந்த புதன்கிழமை படையினரால் கைப்பற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தப் பகுதி படையினரின் கட்டுப்பாட்டுக்குள் வந்ததைத் தொடர்ந்து பாதுகாப்பு வலயப் பிரதேசம் படையினரால் முற்றாகச் சுற்றிவளைக்கப்பட்டிருப்பதாக பாதுகாப்பு அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

படையினரின் 58ஆவது படைப்பிரிவே இந்தப் பகுதியைத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தது.

சுமார் ஒரு வார காலமாக இடம் பெற்ற கடுமையான மோதல்களையடுத்தே இப்பகுதியை படையினர் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர். இப்பகுதியைப் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்திருப்பதன் மூலம் 58ஆவ்து படையணியினர், 53ஆவது படையணியினருடன் இணைப்பை ஏற்படுத்தியிருப்பதாகவும் படைத்தரப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த நிலையிலேயே படையினரின் பலம் வாய்ந்த ஐந்து படையணிகள் வன்னியில் பெருந் தொகையான பொது மக்கள் அடைக்கலம் புகுந்திருக்கும் பாதுகாப்பு வலயப் பகுதிக்குள் ஐந்து முனைகளினால் பிரவேசிப்பதற்கு தயார் நிலையில் வைக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந் நடவடிக்கையை எவ்வாறு மேற்கொள்வது என்பதையிட்டு களமுனை தளபதிகளுடன் முக்கிய ஆலோசனைகளை நடத்துவதற்காக இராணுவ தளபதி சரத் பொன்சேகா நேற்று முன்தினம் சனிக்கிழமை அவசரமாக வவுனியாவுக்கு சென்றிருந்ததாகவும் தெரிகின்றது.

களமுனையிலுள்ள முக்கிய மூத்த தளபதிகளும் இராணுவத்தளபதியுடனான இந்த சந்திப்புக்காக நேற்று முன்தினம் அவசரமாக வவுனியாவுக்கு அழைக்கப்பட்டிருந்தனர். இராணுவத் தளபதியுடனான ஆலோசனைகளை அடுத்து களமுனைத் தளபதிகள் உடனடியாகவே முல்லைத்தீவுப் பகுதிக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். இவர்களுக்கு முக்கியமான உத்தரவுகளை இராணுவத்தளபதி பிறப்பித்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வன்னிப் போர் தீவிரமடைந்த போது விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்த முல்லைத்தீவின் கடற்கரையோரப் பகுதிகளை பாதுகாப்பு வலயமாக அறிவித்த படையினர், பொது மக்கள் அந்தப் பகுதிக்கு செல்ல வேண்டும் எனவும் உத்தரவிட்டிருந்தனர்.

புதுமாத்தளன், அம்பலவன் பொக்கணை, வலைஞர்மடம் ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய கடற்கரையோரப் பகுதிகளே பாதுகாப்பு வலயமாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தப் பகுதிக்குள் தற்போது 3 இலட்சம் மக்கள் அடைக்கலம் புகுந்திருப்பதாக வன்னித்தகவல்கள் தெரிவிக்கின்றனர்.

படையின் 55ஆவது படைப் பிரிவு, 58 ஆவது படைப்பிரிவு, 53ஆவது படைப்பிரிவு, 59ஆவது படைப்பிரிவு மற்றும் சிறப்புப் படைப்பிரிவு-8 என்பன இந்தப் பாதுகாப்பு வலயப் பகுதியை தற்போது சுற்றிவளைத்திருப்பதாக படைத்தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தப் படைப்பிரிவுகள் பாதுகாப்பு வலயத்தின் மீது தாக்குதல் ஒன்றை நடத்தி அதற்குள் பிரவேசிப்பதற்கு தயாராக இருப்பதாக படைத்தரப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்ற போதிலும் இந்த நடவடிக்கை எப்போது மேற்கொள்ளப்படும் என்பது தொடர்பாக எந்தத் தகவல்களையும் தெரிவிக்கவில்லை.

இருந்த போதிலும் இந்தப்பகுதியில் நிலை கொண்டுள்ள படையினர் மீது விடுதலைப் புலிகளின் தாக்குதல்கள் அண்மைக்காலமாக தீவிரமடைந்திருப்பது படையினருடைய திட்டங்களை சீர்குலைப்பதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுப்பதாக அமைந்து விடும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

படையினரின் முன்னரங்க நிலைகளின் மீது கடுமையான தாக்குதல்களை தொடுத்துள்ள விடுதலைப் புலிகள், சிறிய குழுக்களாக படையினரால் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்ட பகுதிகளுக்குள்ளும் பிரவேசித்து தாக்குதல்களை நடத்தி வருகின்றனர்.

கடந்த வாரத்தில் மட்டும் விசுவமடு மற்றும் கொக்காவில் பகுதிகளுக்குள் ஊடுருவிச் சென்ற விடுதலைப் புலிகள் தாக்குதல்களை நடத்தியிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. இவ்வாறான தாக்குதல்களை விடுதலைப் புலிகள் தீவிரப் படுத்தியிருப்பது படையினருடைய திட்டங்களுக்கு பாதிப்பினை ஏற்படுத்துவதாக அமையலாம் எனவும் சுட்டிக்காட்டப்படுகின்றது. (எ-1)

# மோதல் சம்பவங்களை அடுத்து அம்பாறையில் பாதுகாப்பு அதிகரிப்பு

அம்பாறை மாவட்டத்தில் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கடந்த வாரம் மோதல் சம்பவம் இடம் பெற்றதைத் தொடர்ந்து அம்பாறை மாவட்டத்தின் தென்பகுதி கிராமங்களின் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டிருக்கின்றன.

அம்பாறை மாவட்டத்தின் தென்பகுதியில் உள்ள கிராமங்களுக்குள் விடுதலைப்புலிகள் ஊடுருவியிருப்பதாக கிடைத்த தகவல்களைத் தொடர்ந்து குறிப்பிட்ட காட்டுப் பகுதிக்குள் பிரவேசித்த சிறப்பு அதிரடிப் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இடம்பெற்ற கடும் சமரில் அதிரடிப் படையைச் சேர்ந்த 11 பேர் கொல்லப்பட்டிருந்தனர்.

இச் சம்பவத்தையடுத்து விடுதலைப் புலிகளைச் சேர்ந்தவர்கள் தொடர்ந்தும் அம்பாறை காடுகளுக்குள் மறைந்திருக்கலாம் எனக் கருதப்படுவதாலும் இவர்கள் தாக்குதலில் ஈடுபடலாம் எனக் கிடைத்துள்ள தகவல்களையடுத்துமே அம்பாறை தென் பகுதிக் கிராமங்களின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருக்கிறது. அம்பாறை மாவட்டத்தின் தென்பகுதியில் உள்ள சியம்பலாந்துவ, லகுங்கல, பக்மித்தியாவ, பனல்கம மற்றும் மாதோட்டம் ஆகிய கிராமங்களிலேயே பாதுகாப்பு ஏற்பாடுகளை சிறப்பு அதிரடிப் படையினர் பலப்படுத்தியுள்ளனர்.

அம்பாறை காட்டுப் பகுதிக்குள் மறைந்திருந்து செயற்படும் விடுதலைப் புலிகளே இங்குள்ள சிங்கள கிராமங்களின் மீது அண்மைக்காலங்களில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களுக்குப் பொறுப்பாக இருந்துள்ளனர் என அதிரடிப்படை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ள குறிப்பிட்ட கிராமங்கள் மீது தாக்குதல் நடத்தப்படலாம் என கிடைத்த புலனாய்வுத் தகவல் களைத் தொடர்ந்தே அவற்றின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருப்பதாகவும் அதிரடிப்படை வட்டாரங்கள் தெரிவித்தன. (எ-1)

# தமிழ்ப் பெண் கண்டியில் கைது

கண்டி பேருந்து நிலையத்தில் தமது சொந்தக் கிராமத்துக்குச் செல்வதற்காகக் காத்திருந்த தமிழ்ப் பெண் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

கண்டி நகரில் உள்ள ஹன்டல என்ற இடத்தில் ரூபவாஹினி தொலைக்காட்சி கோபுரத்துக்கு அருகில் உள்ள பேருந்து நிலையத்தில் பேருந்துக்காகக் காத்திருந்த போதே இந்தத் தமிழ்ப் பெண் கைது செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இவரது நடமாட்டத்தில் சந்தேகம் இருப்பதாக பொலிஸாருக்கு அப் பகுதி மக்கள் கொடுத்த தகவலைத் தொடர்ந்து அப்பகுதிக்கு வந்த பொலிஸார் அவரைக் கைது செய்து கொண்டு சென்றனர்.

இவரிடம் இருந்து இரண்டு கடவுச்சீட்டுக்கள் கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைதான பெண் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். எனினும் அவரின் விபரங்களை பொலிஸார் வெளியிடவில்லை. (எ-1)

## சுவாமி விவேகானந்தரின் வீர முரசு பலம்



நீங்கள் உங்கள் இயல்பை மட்டும் உணர்ந்து விட்டால் நீங்கள் ஆன்மாக்களே ; நீங்கள் தெய்வங்களே. உங்களை இழித்துரைப்பதாக எப்போதாவது எனக்குத் தோன்றுமானால் உங்களை மனிதர் என்னும் போதே அது.

நான் உண்மை வழி நிற்பவன் உண்மை ஒரு போதும் பொய்யோடு ஒன்றுசேராது உலகம் முழுதுமே என்னை எதிர்த்து நின்றாலும், இறுதியில் உண்மை வெல்வது நிச்சயம். இவ்வுலகம் கோழைகளுக்கல்ல ஓட முயலாதே. வெற்றியையோ, தோல்வியையோ எதிர்பார்க்காதே.

பழிவாங்குவதைப் பற்றி ஒரு போதும் நான் பேசிய தில்லை. எப்போதும் பலத்தைப் பற்றியே பேசியுள்ளேன் கடலில் உள்ள சிறு நீர்த்துளியைப் பழிவாங்க நாம் கனவிலும் கருதுவதுண்டா? ஆனால் ஒரு கொசுவிற்கோ அது மிகப் பெரியது!



தென்னிந்தியத் திருச்சபையின் வட்டுக்கோட்டை கத்தரில் சிறுவர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டுப் போட்டியில் சிறுவர் பாடசாலை பொறுப்பாசிரியரும் யாழ்ப்பாணக் கல்லூரி சமய சமூக ஆய்வு கிறிஸ்தவ நிலையத்தின் இயக்குநரும் ஆசிரியருமான வண D.S. சொலமன் பிரதம விருந்தினரான வட்டுமத்திய கல்லூரி அதிபர் சபாரட்ணசிங்கி ஆகியோர் உரையாற்றுவதையும், மாணவி ஒருவருக்கு பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:-கிருஸ்ணா)

# இலங்கைக்கான அபிவிருத்தி உதவிகளை இடைநிறுத்தியுள்ளதாக நெதர்லாந்து அறிவிப்பு

(கொழும்பு)

இலங்கைக்கான அபிவிருத்தி உதவிகளை நெதர்லாந்து இடைநிறுத்தியுள்ளதாக அந்நாடு அதிகார பூர்வமாக அறிவித்திருக்கின்றது.

இலங்கை உட்பட பொஸ்னியா எரித்திரியா, அல்பானியா, ஆர்மேனியா, மசிடோனியா, கம்போடியா ஆகிய நாடுகளின் அபிவிருத்திக்கு வழங்கப்படும் உதவிகளையே நெதர்லாந்து தற்காலிகமாக இடை நிறுத்தியிருக்கின்றது.

குழப்பமான அரசியல் நிலை பாதுகாப்பில்லாத நிலை பிற நிறுவணங்களிடம் இருந்து அதிகமான உதவிகளைப் பெறுகின்றமையை காரணம் காட்டி மேற்படி நாடுகளுக்கான உதவிகளை இடை நிறுத்துவதாக நெதர்லாந்து அரசாங்கம் அறிவித்திருக்கின்றது.

அபிவிருத்தி உதவிக்கான இடை நிறுத்தம் தொடர்பாக அந்நாட்டின் அமைச்சர் கூன் டோஸ் அறிவித்திருப்பதுடன் வெளிவிவகார அமைச்சின் இணையத் தளத்திலும் வெளியிடப்பட்டிருக்கின்றது.

கடந்த காலங்களில் இலங்கை க்கு அதிக உதவிகளை அபிவிருத்திக்கு என நெதர்லாந்து அரசாங்கம் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (6)

# மார்ச் மாதத்தில் மட்டும் 599 பேர் வன்னி மருத்துவமனையில் உயிரிழப்பு

## டாக்டர் வரதராஜா தெரிவிப்பு

(கொழும்பு)

கடந்த மார்ச் மாதத்தில் மட்டும் இலங்கை படையினரின் எறிகணைத் தாக்குதல் மற்றும் வான்குண்டு வீச்சினால் படுகாயமடைந்த 14 கர்ப்பிணிப் பெண்கள் உட்பட 599 பேர் புதுமாத்தளன் மருத்துவமனையில் உயிரிழந்துள்ளனர். இதனைவிட மேலும் பலர் மருத்துவமனைக்குக் கொண்டு வரப்படுவதற்கு முன்னதாகவே உயிரிழந்தனர்.

வன்னியில் கடந்த மார்ச் மாத நிலவரம் தொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கையில் முல்லைத்தீவு மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் வரதராஜா இந்தத் தகவல்களை வெளியிட்டுள்ளார்.

இவரது அறிக்கையின் முக்கிய விபரங்கள் வருமாறு,

698 சிறுவர்கள் உட்பட 3 ஆயிரத்து 350 பேர் எறிகணைத் தாக்குதல்களால் படுகாயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

14 கர்ப்பிணி பெண்கள் உட்பட 599 பேர் மருத்துவமனையில் உயிரிழந்தனர். மருத்து வமனைக்கு வெளியில் .இடம்பெற்ற உயிரி ழப்புக்கள் இதில் உள்ளடக்கப்படவில்லை.

மேலதிக சிகிச்சைக்காக கப்பல் மூலம் 3 ஆயிரத்து 944 பேர் திருமலைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

வெளிநோயாளர் பிரிவில் 1 லட்சத்து 19 ஆயிரத்து 625 பேர் சிகிச்சை பெற்றுள்ளனர். 410 பிரசவங்கள் இடம் பெற்றுள்ளன.

இந்த விபரங்கள் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளன. (6)

# இத்தாலி றோம் நகரில் மாபெரும் கவனயீர்ப்புப் போராட்டம்



இத்தாலியின் தலைநகர் றோமில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இத்தாலியில் மிகப் பெரிய தொழிற்சங்கமான GGIL வேலையின்மை வேலைநேரக் குறைப்பு தொழிற் சட்டங்களுக்கு எதிராக மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலத்தை நடத்தியி ருந்தது.

இந்த ஊர்வலத்தில் இத்தாலியின் பல பாகங்களிலுமிருந்து 27 இலட்சம் மக்கள் கலந்து கொண்டனர்.

இந்த மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் இத்தாலியின் பல பாகங்களிலுமிருந்து 200க்கு மேற்பட்ட தமிழர்கள் கலந்து கொண்டனர்.

இவர்கள் இலங்கையில் இடம்பெற்றுவரும் மனிதப் பேரவல வாழ்வையும் போர் நிறுத்தத்தின் அவசியத்தையும் நிரந்தர தீர்வுக்கான சர்வதேச அழுத்தத்தையும் வலியுறுத்தினர் அத்துடன் 40 ஆயிரத்துக்கு மேற்பட்ட துண்டுப் பிரசுரங்களையும் விநியோகித்தனர். (6)

# உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொண்டு ஜனாதிபதி லிபியா செல்ல தீர்மானம்



(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ 3 நாள் உத்தியோக பூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு லிபி யாவுக்கு செல்ல உள்ளதாகத் தெரி விக்கப்படுகிறது. எதிர்வரும் 8ஆம் திகதி முதல் 11ஆம் திகதி வரையில் ஜனாதிபதி லிபி யாவில் தங்கியி ருப்பார் எனக் குறிப்பிடப் படுகிறது.

லிபியா ஜனாதிபதி முஹம்மர் கடாபி உள்ளிட்ட தலைவர்களை சந்தித்து பேச்சு வார்த்தை நடத்தவுள்ளதாகத் தெரிவிக்கப்படு கிறது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் வெளிவிவகார அமைச்சர் ரோஹித்த போகொல்லாகம உள்ளிட்ட பிரதி நிதிகளும் லிபியா செல்லவுள்ளனர். (6)

# பாரிய நீர் விநியோக திட்டங்களை நடைமுறைப்படுத்த தீர்மானம்


(கொழும்பு)

இலங்கையில் மொத்த சனத்தை தொகையில் 23 வீதமானோர் சுத்தமற்ற நீரை பருகுகின்றமை ஆய்வொன்றின் மூலம் தெரிய வந்துள்ளதாக நீர்வழங்கல் அமைச்சு தெரி விக்கின்றது. வடக்கு கிழக்கு பகுதிகளில் வாழும் பொது மக்களே சுத்தமான நீரினை பருகு வதில் அதிக சிரமத்தை எதிர்நோக்குவதாக நீர்வழங்கல் அமைச்சர் மஹிந்த அமரவீர சுட்டிக்காட்டினார். இதன் காரணமாக அந்தப் பகுதிகளில் பாரிய நீர் விநியோக திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்குத் தீர்மானித்துள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

வடக்கு பகுதியை இலக்காகக்கொண்டு இரணைமடு நீர்விநியோகத் திட்டத்தை விரைவில் நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுத்து வருவதாகவும் அவர் தெரிவித்தார். (6-4)

# இடம்பெயர் மக்கள் தொடர்பாக அரசு ஐ.நா.செயலருடன் இணைந்து பணியாற்ற வேண்டும்

## ரணில் தெரிவிப்பு



(கொழும்பு)

முல்லைத்தீவில் இடம்பெயர்ந்துள்ள மக்கள் தொடர்பாக அரசாங்கம் ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகத்துடன் இணைந்து செயற்பட வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவில் இடம்பெயர்ந்துள்ள மக்களின் பிரச்சினையே தமிழ் மக்களின் பாரிய பிரச்சினையாக உள்ளதாகவும் ரணில் விக்கிரமசிங்க கூறினார்.

யுத்தம் காரணமாக பெரும்பாலானவர்கள் உயிரிழந்ததாக குறிப்பிட்ட அவர் இந்தப் பிரச்சினை தற்போது சர்வதேசப் பிரச் சினையாகவும் மாறியுள்ளதாகவும் பயங்கரவாதத்தை ஒழிக்க வேண்டும் எனவும் அப்பாவி மக்கள் பலியாவதற்கு இடமளிக்கக் கூடாது எனவும் குறிப்பிட்டார்.

இது தொடர்பாக ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகத்துடன் இணைந்து செயற்படுமாறு அரசாங்கத்தை கேட்டுக்கொள்வதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (6-3)

# தமிழ் மக்களுக்கு போதியளவு சர்வதேச ஆதரவு கிடைக்கப் பெறவில்லை

## அமெரிக்க தமிழர் அமைப்பு தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழ் மக்களுக்கு போதியளவு சர்வதேச ஆதரவு கிடைக்கப் பெறுவதில்லை என அமெரிக்க தமிழர் அமைப்பொன்று குற்றம் சுமத்தியுள்ளது.

புலம் பெயர் தமிழர்களிடம் அண்மையில் இணையமூடாக நடத்தப்பட்ட கருத்துக் கணிப்பின் மூலம் இந்த உண்மை வெளிப்பட்டுள்ளது. அதிகளவான தமிழ் மக்கள் சர்வதேச ரீதியில் தனிமைப்படுத்தப்பட்டுள்ள நிலையை உணர்வதாக கருத்துக் கணிப்பின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு சர்வதேச சமூகத்தின் ஆக்கபூர்வமான பங்களிப்பு கிடைக்கப்பெற்றால் தமிழர் அபிலாஷைகளை வென்றெடுக்க முடியும் என புலம் பெயர் தமிழர்கள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர் நூறிற்கும் மேற்பட்ட நாடுகளில் வசிக்கும் 12ஆயிரத்து 300 புலம் பெயர் இலங்கைத் தமிழர்களிடம் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சர்வதேச நாடுகளின் உதவியுடன் மட்டுமே வன்னியில் சிக்கியுள்ள அப்பாவி பொது மக்களை மீட்கவும் பாதுகாக்கவும் முடியும என தெரிவிக்கப்படுகிறது. (6)

# காம்பீர் அசத்தல் சதம்; இந்திய அணி ஆதிக்கம்



(வெலிங்டன்)

காம்பீரின் சிறப்பான சதத்தின் மூலம் இந்திய அணி நேற்றைய மூன்றாம் நாள் ஆட்ட நேர முடிவில் அதன் இரண்டாவது இன்னிங்ஸில் 5 விக்கெட்டுக்களையிழந்து 349 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இதன் மூலம் இந்திய அணி இரண்டாவது இன்னிங்ஸில் 531 ஓட்டங்கள் வித்தியாசத்தில் முன்னிலை பெற்றுள்ளது.

நியுசிலாந்திற்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணி 2 இருபது -20,5 ஒருநாள் மற்றும் 3 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் இருபது-20 தொடரை நியூசிலாந்து அணி 2:0 என்ற கணக்கிலும் ஒருநாள் தொடரை இந்திய அணி 3:1 என்ற கணக்கிலும் கைப்பற்றின.

தொடர்ந்து நடைபெற்ற முதலிரண்டு டெஸ்ட் போட்டிகளில் இந்திய அணி முதலாவது போட்டியில் வெற்றி பெற்றதுடன் இரண்டாவது போட்டி சமனிலையானது.

இந்நிலையில் தீர்க்கமான மூன்றாவதும் இறுதியுமான டெஸ்ட் கடந்த 3 ஆம்திகதி வெலிங்டனில் ஆரம்பமானது.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற நியூசிலாந்து அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 379 ஓட்டங்களை எடுத்தது.

தொடர்ந்து தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி 197 ஓட்டங்களை மாத்திரமெடுத்து சகல விக்கெட்டுக்களையுமிழந்தது.

இதன்மூலம் முதலாவது இன்னிங்ஸில் 182 ஓட்டங்கள் வித்தியாசத்தில் முன்னிலை பெற்ற இந்திய அணி இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடி நேற்று முன்தினம் இரண்டாம் நாள் ஆட்ட நேர முடிவில் ஒரு விக்கெட்டையிழந்து 51 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இந்நிலையில் மூன்றாம் நாளான நேற்று தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய இந்திய அணி; காம்பீர், டிராவிட், லக்ஸ்மன் ஆகியோரின் சிறப்பான ஆட்டத்தின் மூலம் வலுவான இலக்கைத் தொட்டது.

இதன் மூலம் இந்திய அணி நேற்றைய மூன்றாம் நாள் ஆட்ட நேர முடிவில் 5விக்கெட்டுக்களையிழந்து 349 ஓட்டங்களை எடுத்து இரண்டாவது இன்னிங்ஸில் 531 ஓட்டங்கள் வித்தியாசத்தில் முன்னிலையிலுள்ளது.

இதில் 6 டெஸ்ட் சதத்தை பூர்த்தி செய்த காம்பீர் 257 பந்துகளில் (16 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் உட்பட) 167 ஓட்டங்களையும் வி.வி.எஸ். லக்ஸ்மன், 61 டிராவிட்60 ஓட்டங்களையும் எடுத்து ஆட்டமிழந்ததுடன் அணித்தலைவர் தோனி 16, யுவராஜ் சிங் 15 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் பெற்றனர்.

பந்துவீச்சில் அணித்தலைவர் விக்டோரி, ஓ பிறின் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் மார்டீன் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர். நான்காம் நாள் ஆட்டம் இன்றாகும்.

# 15 பந்துகளில் அரைச்சதம் அடித்தார் சல்மான் பட்



(கராச்சி)

பாகிஸ்தானில் நடந்த உள்ளூர் போட்டியில் 15 பந்தில் அரைசதம் அடித்து சல்மான் பட் சாதனை படைத்துள்ளார்.

பாகிஸ்தானில் 50 ஓவர்கள் கொண்ட உள்ளூர் கிரிக்கெட் போட்டிகள் நடைபெற்று வருகின்றன.

இதில் முன்னணி அணிகளான தேசிய பாங்க் மற்றும் லாகூர் ஈகிள்ஸ் அணிகள் மோதின முதலில் ஆடிய லாகூர் ஈகிள்ஸ் அணி 40.3 ஓவரில் 122 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

அடுத்து களமிறங்கிய தேசிய பாங்க் அணி 6.1 ஓவரில் 123 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்று அரையிறுதிக்குள் நுழைந்தது.

தேசிய பாங்க் அணியின் சார்பில் களமிறங்கிய சல்மான் பட் 15 பந்துகளில் அரைசதம் அடித்து மிரட்டினார். 25 பந்துகளை சந்தித்த அவர் 92 ஓட்டங்கள் குவித்து ஆட்டமிழக்காமல் இருந்தார்.

கடந்த 1994 இல் யார்க்ஷையர் அணிக்கு எதிராக அவுஸ்திரேலியாவின் அடம் ஹோலியாக் 15 பந்துகளில் அரைசதம் அடித்து இருந்தார். இந்த சாதனையை சல்மான் பட் சமன் செய்துள்ளார்.

முதல்தர கிரிக்கெட்டில் அதிவேக அரைசதம் என்ற சாதனையை இலங்கையின் வீரரத்னே தன்வசம் வைத்து உள்ளார். இவர் கடந்த 2006இல் கொழும்பில் 12 பந்துகளில் 50 ஓட்டங்கள் எடுத்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## வீரர்கள் உயிரைக் காப்பாற்றிய

# பாகிஸ்தான் பஸ் சாரதி கலிலுக்கு கொழும்பில் இன்று பாராட்டு விழா

லாகூர் தாக்குதலின் போது இலங்கை அணி வீரர்கள் உயிரை காப்பாற்றிய பஸ் சாரதி கலிலுக்கு இன்று கொழும்பில் பாராட்டு விழா நடத்தப்படுகிறது.

பாகிஸ்தான் சென்ற இலங்கை கிரிக்கெட் வீரர்கள் மீது லாகூரில் பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தினர்.

அப்போது சாரதி கலில் பஸ்சை வேகமாக செலுத்திச் சென்று வீரர்கள் உயிரை காப்பாற்றினார். இதற்காக பாகிஸ்தான் அதிபர் ஆசிப் அலி சர்தாரி ரூபாய் 5 இலட்சம், அந்நாட்டு கிரிக்கெட் சபை சார்பில் ரூபாய் 2 இலட்சம் பரிசாகக் கொடுக்கப்பட்டது.

சாரதி கலிலை அழைத்து கௌரவிக்க இலங்கை கிரிக்கெட் சபை முடிபு செய்துள்ளது.

இதற்கான விழா இன்று நடத்தப்படுகிறது. இதில் கலில் அவரது குடும்பத்தினருடன் பங்கேற்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

விழாவில் இலங்கை விளையாட்டுத்துறை அமைச்சர் காமினி லொக்குகே, கிரிக்கெட் சபைத் தலைவர், உறுப்பினர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

# இருபது -20 உலக கிண்ண அணியிலிருந்து ஸ்ரீசாந்த் நீக்கம்

(புதுடில்லி)

இரண்டாவது இருபது-20 உலக கோப்பை தொடருக்கான உத்தேச இந்திய அணியில் இருந்து ஸ்ரீசாந்த், ஜோகிந்தர் சர்மா நீக்கப்பட்டுள்ளனர்.

மூத்த வீரர்களான சச்சின், டிராவிட், லக்ஸ்மன் ஆகியோருக்கு இம்முறையும் வாய்ப்பு அளிக்கப்படவில்லை.

சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி) சார்பில் முதலாவது இருபது-20 உலக கோப்பை கிரிக்கெட் தொடர் கடந்த 2007 ஆம் ஆண்டு நடந்தது.

இதில் தோனி தலைமை யிலான இந்திய அணி கோப்பை வென்று சாதித்தது.

இரண்டாவது இருபது-20 உலகக்கோப்பை தொடர் எதிர்வரும் ஜூன் 5 ஆம் திகதி முதல் 21 ஆம் திகதி வரை இங்கிலாந்தில் நடக்கிறது. இதற்கான 30 பேர் கொண்ட உத்தேச இந்திய அணியை இந்திய கிரிக்கெட் சபை (பி.சி.சி.ஐ) நேற்று முன்தினம் அறிவித்தது.

இதில் கடந்த முறை அசத்திய வேகப்பந்து வீச்சாளர்களான ஸ்ரீசாந்த், ஜோகிந்தர் சர்மா ஆகியோர் இடம்பெறவில்லை. தவிர பியுஸ் சாவ்லா, அஜித் அகார்கரும் சேர்க்கப்படவில்லை.

கணுக்கால் காயம் காரணமாக ஸ்ரீசாந்த் நீக்கப்பட்டிருக்கலாம். ஆனால் ஜோகிந்தர் சர்மா, அகார்கர் இடம்பெறாததற்குக் காரணம் தெரியவில்லை.

**உத்தப்பா வருகை**

சுமார் 8 மாதங்களுக்கு பின் உத்தப்பா வாய்ப்புப் பெற்றுள்ளார். தவிர மூத்த வீரர்களான சச்சின், டிராவிட், லக்ஸ்மன் ஆகியோர் இம்முறையும் இடம்பெறவில்லை. இது குறித்து பி.சி.சி.ஐ. செயலாளர் சீனிவாசன் கூறுகையில்,

வீரர்கள் தேர்வு குறித்து பி.சி.சி.ஐ. கருத்துக்கூறமுடியாது. இது முற்றிலும் தேர்வுக்குழுவை சார்ந்தது என்றார்.


இருபது-20 உலகக் கோப்பை தொடருக்கான 30 பேர் கொண்ட உத்தேச இந்திய அணி வருமாறு,



தோனி, சேவாக், காம்பீர், தினேஷ் கார்த்திக், முரளி விஜய், சுரேஷ் ரெய்னா, யுவராஜ் சிங், ரோகித் சர்மா, ரோபின் உத்தப்பா, பத்ரிநாத், விராத் கோஹ்லி, யூசுப்பதான், இர்பான் பதான், மனோஜ் திவாரி, சகீர்கான், இஷாந்சர்மா, அமித்மிஸ்ரா, முனாப் பட்டேல், ரவீந்திர ஜடேஜா, ஆர்.பி. சிங், பிரக்யான் ஓஜா, பாலாஜி, ஹர்பஜன் சிங், தவால் குல்கர்ணி, பிரவீன் குமார், நமன் ஓயா, அஜின் கியாரகனே, அபிஷேக் நாயர், ஆர். அஸ்வின், விருத்திமன்சகா.

# சுழல் நாயகன் முரளியின் சாதனைப் பயணம்... 55





**அனுமதி கிடைத்தது**

மெல்பேர்ன் சத்திர சிகிச்சை நிபுணரின் பரிசோதனை முடிந்த பின் முரளிதரன் குறிப்பிடுகையில், நான் பந்தை எறிய வில்லை இதனை நான் சட்ட பூர்வமாக நிருபித்துக்காட்டத்தயார். என்னுடைய முழங்கை பிறப்பிலேயே வளைவுள்ளது. அதனால் எனது பந்துவீசும் பாணியை மாற்ற முடியாது.

நடுவர் ஹெயார் இதற்கு முன் சார்ஜா ஒருநாள் கிரிக்கெட் தொடர் அண்மையில் சிட்னியில் நடந்த போட்டியில் நடுவராகப் பணியாற்றிய போது எனது பந்து வீச்சை அவர் எதிர்க்க வில்லை. இப் போட்டியி[பாலா] எனது பந்துவீச்சு கிரிக்கெட் விதிகளுக்கு முரணானது என தீர்ப்பளித்தார் ஏன்? முன்னைய போட்டிகள் வீசிய பாணியிலேயே இப் போட்டியிலும் நான் பந்து வீசினேன் என முரளிதரன் தெரிவித்தார்.

இந்நிலையில் சத்திர சிகிச்சை நிபுணர்களில் ஆய்வுகளின் பிரகாரம் முரளிதரனின் பந்து வீச்சு பாணி அவர் பந்தை எறிவதாக பார்வைக்கே மாயையாகத் தெரிகிறது. ஆனால் முரளிதரனின் பந்து வீச்சு கிரிக்கெட் விதிகளுக்கு உட்பட்டது என 1996ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ஐ.சி.சி. அறிவித் தது. அத்துடன் தொடர்ந்து வரும் போட்டிகளில் அவர் விளையாடவும் ஐ.சி.சி. அனுமதியளித்தது. இதனால் 1996ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 3ஆம் திகதி மேற்கிந் தியத் தீவுகள் அணிக்கு எதிராக ஹோபாட்டில் நடந்த போட்டியில் முரளிதரன் விளையாடி னார். ***(பயணிக்கும்)***

# எண் விளையாட்டு-58

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ■ | ■ | 11\ | 11\ | 32\ | ■ | 8\ | 20\ | 19\ | ■ |
| ■ | 21\9 | | | | \22 | | | | 23\ |
| \22 | | | | \14 | | | | | |
| \28 | | | | 6\21 | | | | | |
| \5 | | | 27\12 | | | 32\9 | | | |
| ■ | 7\ | 14\19 | | | | | | 12\ | 19\ |
| \20 | | | | 24\7 | | | 13\4 | | |
| \14 | | | | \13 | | | | | |
| \23 | | | | \29 | | | | | |
| ■ | \10 | | | | \18 | | | | ■ |

***போட்டிவிதிகள்:*** மேலிருந்து கீழ் தொடங்கும் வெள்ளைக் கட்டங்களில் நிரப்பப்படும்எண்களின் கூட்டுத் தொகை, கட்டங்களின் மேல்புறத்தில் கொடுக்கப்பட்டுள்ள எண்ணுக்கு சமமாகவர வேண்டும். இடமிருந்துவலமாகசெல்லும் கட்டங்களுக்கும் இதே விதிதான். அக்கட்டங்களுக்கான கூட்டுத் தொகை இடப் புறம் கொடுக்கப்பட்டுள்ளது. 1 முதல் 9 வரையான எண்களை பயன் படுத்த வேண்டும். ஆனால் ஒருவரிசையில் பயன்படுத்தியஎண்திரும்பவரக் கூடாது.

**நேற்றைய முன்தின பகுதிக்கான விடை**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ■ | ■ | ■ | [illegible] | [illegible] | ■ | [illegible] | [illegible] | ■ | ■ |
| ■ | ■ | [illegible] | 4 | 1 | [illegible] | 9 | 6 | [illegible] | ■ |
| ■ | [illegible] | 5 | 9 | 3 | 4 | 2 | 1 | 6 | [illegible] |
| [illegible] | 1 | 2 | [illegible] | 5 | 9 | 7 | [illegible] | 7 | 9 |
| [illegible] | 3 | 4 | 1 | 2 | [illegible] | 6 | 9 | 8 | 5 |
| ■ | [illegible] | 8 | 4 | [illegible] | ■ | [illegible] | 5 | 1 | [illegible] |
| [illegible] | 4 | 1 | 2 | 5 | [illegible] | 6 | 8 | 2 | 1 |
| [illegible] | 5 | 6 | [illegible] | 8 | 6 | 9 | [illegible] | 9 | 8 |
| ■ | [illegible] | 9 | 3 | 7 | 2 | 8 | 6 | 4 | ■ |
| ■ | ■ | [illegible] | 7 | 9 | [illegible] | 7 | 1 | ■ | ■ |

# 30 சிறுவர்கள் உட்பட 92 பொதுமக்கள்...

துள்ளதுடன் 153 பேர் படுகாய மடைந்துள்ளனர். உயிரிழந்தவர்களின் விபரம் வருமாறு,

அருணாசலம் ரவி(வயது 37), அழகு மீனா (வயது 49), ஆறுமுகம் சசீலா (வயது 18), லோகநாதன் நிசாந்தினி (வயது 9), வைரமுத்து செல்வரத்தினம் (வயது 50), லௌசீகன் லோகா (வயது 23), விசுவலிங்கம் கனகரத்தினம் (வயது 65), பெரியாம்பிள்ளை சோபமலர் (வயது 67), ரவிசங்கர் லவனிசா (வயது 2), சத்தியானந்தன் சசிகலா (வயது 29),வடிவேலு சந்திரலிங்கராசா (வயது 51), ஜங்கரகுமார் நிதுஷனவான்மதி (வயது 9), ஜேம்ஸ் அந்தோனிப்பிள்ளை (வயது 50), சின்னமணி இன்பநாதன் (வயது 47), கந்தசாமி தியாகராசா (வயது 47), தியாகராசா சங்கீதா (வயது 13), வீரசிங்கம் தர்மலிங்கம் (வயது 56), தில்லையம்பலம் திருச்செல்வம் (வயது 52), ஜோசப் வேணுசன் (வயது 5), தில்லைநாதன் சுமதி (வயது 38), லோகநாதன் ஹேமா (வயது 32), கலைவாணி (வயது 27), லோகநாதன் லோஜிதா (வயது 9), சிவதீபன் புஸ்பராணி (வயது 4), சத்தியமூர்த்தி குணாளன் (வயது 9), புலேந்திரன் விக்னேஸ்வரி (வயது 42), கலைவாணன் (வயது 27), துரைசிங்கம் (வயது 47), கணபதிப்பிள்ளை சண்முகம் (வயது 61), கஸ்தூரி (வயது 14), விஜயரத்தினம் இரத்தினராசா (வயது 44), முருகையா சிவனம்மா (வயது 64),கருணாநிதி தர்சா (வயது 22), மயில்வாகனம் குகேந்திரராசா (வயது 44), கமலநாதன் ராதிகா (வயது 23), மகேந்திரராசா கமலநாதன் (வயது 26), குகேந்திரராசா ராஜலா (வயது 5), கஸ்தூரி ..னுசன் (வயது 8), ஆறுமுகம் கந்தசாமி ..யது 12), சோதி (வயது 48), தர்மேந்திரன் கார்த்திகா (வயது 6), கே.தர்சன் (வயது 22), எஸ்.சிவரூபன் (வயது 6), வீ.இந்திரராஜா (வயது 40), ஆர்.தியாகு (வயது 40), கஸ்தூரி (வயது 16), வீ.துரைசிங்கன் (வயது 47), சத்தியமூர்த்தி குணாளன் (வயது 9), வினோஜா (வயது 17), கணபதிப்பிள்ளை சண்முகராஜா (வயது 58), விசுவலிங்கம் கனகரத்தினம் (வயது 65), வீரசிங்கம் தர்மலிங்கம் (வயது 52), வீரசிங்கம்இந்திரராஜா (வயது 42), சின்னமணி இன்பநாதன் (வயது 47), கந்தையா சிவபாதம் (வயது 50), சிவபாதம் மோகன்ராஜ் (வயது 25), சிவபாதம் தர்மராஜ் (வயது 23), மோகன்ராஜ் ராதிகா (வயது 24), பாலசச்ந்திரன் தர்சன்(வயது 8), சத்தியமூர்த்தி குணாளன் (வயது 10), நாகலிங்கம் பாலகிருஷ்ணன் (வயது 42), மயில்வாகனம் குகேந்திரராசா (வயது 44), குகேந்திரராசா ராஜனா (வயது 13), அன்ரன் லோசன் ரேகா (வயது 3), சின்னமணி இன்பராசா (வயது 47), சசிக்குமார் தேவபாக்கியம் (வயது 51), ஜங்கரன் நிருசன் வான்மதி (வயது 9), தில்லையம்பலம் திருச்செல்வம் (வயது 4), சிவதீபன் புஸ்பராணி (வயது 32), குகேந்திரராசா (வயது 46), விஜயரத்தினம் இந்திரராசா (வயது 46), மரியநாயகம் சுதீசன் (வயது 21), பாலகுமார் பாதுசன் (வயது 5), மயில்வாகனம் தேவநேசன் (வயது 14), கனியமுதன் கவிஞன் (வயது 16),வைரமுத்து காருண்யன் (வயது 12), வைரன் துரைசிங்கம் (வயது 42), காந்தி மதியமலர் (வயது 29), கலாதீபன் விதுஷனா (வயது 8), தேவன் பவிசா (வயது 9), கண்ணாளன் காவியா (வயது 13), வேணுகாந்தன் யோகம்மாள் (வயது 40), கலைத்தேவன் ரேணுகா (வயது 35), இன்பநாதன் சின்னராசா (வயது 44), அந்தோனி யோசப் மரியநாயகம் (வயது 52), கதிர்வேலு மருதம்மா (வயது 52), கதிரித்தம்பி பவிசனா (வயது 11), நாகமணி துஷாந்தன் (வயது 12).

இதேவேளையில் மாத்தளன் கடற்பரப்பில் பொருட்களைஇறக்கிக் கொண்டிருந்த கப்பலை நோக்கி நடத்தப்பட்ட ஆர்.பி.ஜி தாக்குதலில் கரையோரத்தில் நின்ற இரு சிறுவர்கள் பலியானதுடன் 5 பேர் படுகாயமடைந்துள்ளனர்.சத்தியமூர்த்தி குணாளன் (வயது 10), நாகலிங்கம் பாலகிருஷ்ணன் (வயது 16) ஆகிய சிறுவர்களே படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

அதேவேளையில் வான்படையின் எம்.ஐ.-24 உலங்கு வானூர்தி நேற்று நடத்திய தாக்குதலில் 2 பேர் உயிரிழந்துள்ளதுடன் 15 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

வைரமுத்து செல்வரத்தினம் (வயது 55), விசுவலிங்கம் கனகரத்தினம் (வயது 65) ஆகியோர் இத்தாக் குதலில் உயிரிழந்ததாக தெரிவிக்கப்பட்டது. (ச-5)

## சீனா, இந்...

ரீதியில் ஏற்பட்டிருக்கும் பொருளாதார நெருக்கடியால் இலங்கைக்கு ஏற்பட்டிருக்கும் பாதிப்பிலிருந்து மீள்வதற்காக இலங்கை அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்திடம் 1.9 பில்லியன் அமெரிக்க டொலர் கடன் கோரியிருந்தது. எனினும் இந்தக் கடன் தொகையை வழங்குவதற்கு முன்னர் தமது நிபந்தனைகள் சிலவற்றை இலங்கை அரசாங்கம் நிறைவேற்ற வேண்டும் என நாணயநிதியம் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-1)

## இந்தியாவின்...

கருதக்கூடாது.

நாங்கள் இந்தியாவுக்கோ இந்திய நலன்களுக்கோ எதிரானவர்கள் அல்ல. எங்களை நண்பனாக ஏற்றுக் கொள்ள வேண்டுமென்றார். இலங்கையில் நடைபெற்றுவரும் போரில் கடந்த 2 ஆண்டுகளில் மட்டும் புலிகள் இயக்கத்தினர் 4 ஆயிரம் பேர் உயிரிழந்துள்ளனர்.

அதேநேரத்தில் இலங்கை இராணுவ வீரர்கள் 20 ஆயிரம் பேரும் கொல்லப்பட்டுள்ளனர். எங்கள் இயக்கத்தின் தலைவர் சிறப்பான உடலீ நலத்துடன் உள்ளார். அவர் தான் விடுதலைப் போராட்டத்தை வழிநடத்தி வருகிறார். எங்களிடம் இராணுவத்தை எதிர் கொள்ளத் தேவையான அளவு வீரர்களும், ஆயுதங்களும் உள்ளன என்று அவர் கூறியுள்ளார். (எ-1)

## யாழ்.இந்துக்...

150 பேரும் ஆங்கில மொழி மூலம் 50 பேரும் தோற்றியுள்ளனர்.

இவர்களில் 9 ஏயினை 5 பேரும் சி.கோபிநாத், இ.கௌசிகன் (ஆங்கிலமொழி மூலம்), தே.கோகுலன், ப.பாலசங்கர், த.கலையுகன் (தமிழ் மொழிமூலம்) பெற்றனர். ஆங்கில மொழி மூலமாக யாழ்.இந்துக் கல்லூரியில் முதன் முறையாக 50 பேர் பரீட்சைக்குத் தோற்றி 9 ஏயினை 2 பேரும் 8 ஏயினை 10 பேரும் 7 ஏயினை 5 பேரும் 6 ஏயினை 11 பேரும் 5 ஏயினை 8 பேரும் பெற்றது மட்டுமல்லாமல் சகல மாணவர்களும் எல்லாப் பாடங்களிலும் சித்தியடைந்து க.பொ.த உயர்தரத்தில் கல்வி கற்பதற்கு தகுதி பெற்றுள்ளனர். கல்லூரி வரலாற்றில் கணித பாடத்தில் 100 வீதம் சித்தி பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ச-6)

# காரை ஈழத்துச் சிதம்பரத்தின் திருப்பணிகள் குறித்து ஆராய்வு

காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தின் திருப்பணிச் சபையின் பொதுமக்களுடனான கலந்துரையாடல் நேற்றுப் பிற்பகல் ஆலய வளாகத்தில் நடைபெற்றது.

திருப்பணிச் சபைத் தலைவர் லயன் எஸ்.சற்குணராஜா தலைமையில் இடம்பெற்ற இக் கலந்துரையாடலில் ஆலய பிரதம சிவாச்சாரியர்கள் சிவஸ்ரீ.ஈஸ்வரக் குருக்கள், சிவஸ்ரீ.ஸ்கந்தரூபக் குருக்கள், ஆலய ஆதீன கர்த்தா மு.சுந்தரலிங்கம், பேராசிரியர் சி.க. சிற்றம்பலம், பேராசிரியர் எஸ்.சத்தியசீலன், யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் திருமதி நாச்சியார் செல்வநாயகம், கலாசார உத்தியோகத்தர் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இக் கலந்துரையாடலில் ஈழத்துச் சிதம்பரத்தின் திருப்பணிகள் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டது.

திருப்பணிச் சபையால் மேற்கொள்ளப்பட்டுவரும் உள் மண்டபத் திருப்பணிகள் திருப்தியையும் மகிழ்ச்சியையும் அளிப்பதாகவும் தொடர்ந்து வசந்த மண்டபம் உள்ளிட்ட திருப்பணிகளை முன்னெடுக்க வேண்டும் எனவும் கூட்டத்தில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

இக் கூட்டத்தில் கருத்துத் தெரிவித்த ஆதீன கர்த்தா, திருபணிச்சபை தொடர்ந்து இயங்கி முழுத் திருப்பணி வேலைகளையும், நித்திய பூசைகளையும் செய்ய வேண்டுமென கேட்டுக் கொண்டதுடன் ஆதீன கர்த்தாவின் கோரிக்கையை நிறைவேற்றவதெனவும் அங்கு கூடியிருந்த திருப்பணிச் சபை மற்றும் பொது மக்களால் தீர்மானிக்கப்பட்டது. (ந-3)

## இலங்கை...

பொதுமக்கள் பாதுகாப்பு வலயமே எஞ்சியுள்ளது. அப்பகுதியை நோக்கி படையினர் முன் நகரும் சந்தர்ப்பத்தில் பொதுமக்களுக்கு பாரிய அழிவுகள் ஏற்படும்.

இதனால் பாதுகாப்பு வலயத்திலுள்ள சுமார் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் மக்களை காப்பாற்றுவதற்கு உலக நாடுகள் போர் நிறுத்தத்தை ஏற்படுத்துமாறு கடும் தொனியில் இலங்கை அரசை வலியுறுத்தும்.

இவற்றின் அடிப்படையில் போர் நிறுத்தத்தை அறிவிக்கும் கட்டாயம் இலங்கை அரசுக்கு ஏற்பட்டுள்ளது என இந்திய ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். (எ-5)

## புதுக்குடியி...

இது குறித்து அவர் பி.பி.ஸி. தமிழோசைக்கு தெரிவித்ததாவது, இர்ாணுவத்தின் 53,58ஆவது டிவிசன் மற்றும் விசேட தாக்குதல் அணி-8 போன்ற பிரிவுகளைச் சேர்ந்த படையினர் கூட்டாக இணைந்து நடத்திய தாக்குதலின் பின்னர் நேற்றுக் காலை புதுக்குடியிருப்புப் பிரதேசத்தினை தமது முழுமையான கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்துள்ளார்கள். இந்தப் பகுதியில் இடம் பெற்ற உக்கிர மோதல்களின் போது விடுதலைப் புலிகளிற்கு பலத்த இழப்புகள் ஏற்பட்டிருக்கின்றன. தமது நிலைகளை பலப்படுத்தி வரும் படையினர் தற்போது அங்கு முழுமையான தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகிறார்கள் என்று கூறினார்.

இதேவேளை கடந்த 3 நாட்களாக இடம் பெற்று வரும் மிகக் கடுமையான மோதல்களின் போது புலிகளின் மூத்த தலைவர்கள் கொல்லப்பட்டிருப்பதாகவும் மேலும் பலர் தற்போது அரசினால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் மோதல்களற்ற பிரதேசத்தினுள் மக்களுடன் மக்களாக கலந்து மறைந்திருப்பதாகவும் பாதுகாப்பு அமைச்சகம் மேலும் தெரிவிக்கின்றது.

இது குறித்து கருத்து வெளியிட்ட இராணுவப் பே[ச்]சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார, நேற்று ஞாயி[ற்]றுக்கிழமை உள்ளிட்ட கடந்த 3 நாட்களாக இடம் பெற்ற மோதலின் பின்னர் படையினர் சுமார் 420க்கும் அதிகமானவர்களின் உடல்களைக் கண்டுபிடித்திருக்கின்றார்கள்.

இந்த மோதல்களின் போது புலிகளின் இராணுவ தலைவர்கள் என்று கருதப்படும் தீபன், விதுஷா, நாகேஷ், துர்க்கா மற்றும் கடாபி போன்றவர்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். இதில் கடாபி என்பவர் புலிகளின் தலைவரின் பிரத்தியேக பாதுகாப்புக்கு பொறுப்பாக இருப்பவர் என்று தெரிய வருகிறது.

இதனை விட புலிகளின் முக்கிய தளபதிகளில் ஒருவராகக் கருதப்பட்ட பானுவும் காயமடைந்திருப்பதாகவும் தெரிய வருகிறது என்று கூறினார். இது குறித்து விடுதலைப் புலிகளோ அல்லது அவர்கள் சார்பு இணையத் தளங்களோ எந்தவிதமான கருத்துக்களையும் வெளியிடவில்லை.

இதேவேளை இச்சம்பவத்தில் கொல்லப்பட்டதாகக் கூறப்படும் விடுதலைப் புலிகளின் சடலங்கள் எதுவும் தங்களிடம் ஒப்படைக்கப்படவில்லை என சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் பேச்சாளர்களில் ஒருவரான சோபிரமனேஷ் தெரிவித்தார்.

கடைசியாக கடந்த பெப்ரவரி மாதம்தான் மோதல்களில் கொல்லப்பட்டவர்களின் சடலங்கள் தமது அமைப்பின் மூலம் பரஸ்பரம் எதிர்தரப்புக்கு கையளிக்கப்பட்டதாகவும் அதன் பின்னர் அப்படியான சம்பவங்கள் எவையும் இடம் பெறவில்லையென்றும் அவர் கூறினார். (ச-3,5)


கலாலயா
பயிற்சியகம்
பெருமாள் கோயிலுக்கு அண்மையில் - யாழ்ப்பாணம்
மகளிருக்கான துரித குறுகிய கால பயிற்சிகள்

விடுமுறைக் கால 10 நாள் வகுப்புக்கள்

- கூந்தல் அலங்காரம் : 50 வகையான கொண்டைகள் போடுதல், முடி அயன் பண்ணுதல், முடி சுருட்டுதல், முடி நிறமூட்டுதல், V- Cut, U- Cut, Step வடிவங்களில் முடி வெட்டுதல்.
- Facials மற்றும் மணப்பெண்கள் அலங்காரம், 6 முறைகளில் சேலை அணிதல், கைகள், கால்கள், விரல்கள், நகங்கள் அழகு படுத்துதல் (Pedicure, Manicure.)
- ப்ப்றிக் வர்ணம் தீட்டுதல் : கைக்குட்டை, தலையணை உறை, கண்ணாடி மற்றும் சேலையில் (Saree Painting) வர்ணம் தீட்டுதல்.

மேற்படி பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

- தையல் தெரிந்தவர்களுக்கான சாறிபிளவுஸ், சுரிதார், Skirts தைத்தல்

தங்கள் வசதிகளுக்கேற்ப கிழமை நாள் அல்லது சனி, ஞாயிறு பயிலமர்வுகளில் கலந்து கொள்ளலாம்.
மேற்படி பயிற்சிகளுக்கு வயதெல்லை கிடையாது

ஆரம்பம் - 09-04-2009 காலை 9.00 மணி

மேலும் விபரங்களை பி.ப 2.00 மணி வரை நேரில் அறிந்து கொள்ளலாம்.
பதிவாளர்.



உடுவில் மகளிர் கல்லூரி வழங்கும்
" உயிர்ப்பின் உவகை "



'என் மீட்பர் உயிரோடிருக்கிறார் என்றும் அவர் கடைசி நாட்களில் பூமியின் மேல் நிற்பார் என்றும் நான் அறிவேன்'
யோபு 19:25

இடம் : கல்லூரி மண்டபம்
காலம் : 07.04.2009
நேரம் : பி.ப. 4.00மணி, செவ்வாய்க்கிழமை.
(C-2278)



வாழ்த்துகின்றோம்
திவி மத்ஸ் சென்ரர் 154/8B, ஆத்திசூடி வீதி, கந்தர்மடம்.
கணித ஆசானும் நிர்வாகியுமாகிய
ஆர்.கே.மேனன் அவர்களை
சிறந்த பெறுபேறுகளை ஈட்டித் தந்தமைக்காக மனமார வாழ்த்துகின்றோம்.
தகவல்: 2008 ஆம் ஆண்டு O/L பரீட்சைக்குத் தோற்றிய மாணவ, மாணவிகள்.
(2490)



உரும்பிராய் வடக்கு, உரும்பிராய்
ஸ்ரீ நாச்சிமார் அம்மன் ஆலய கும்பாபிஷேகத்தை முன்னிட்டு இடம்பெற்ற ஆலய நிதிக்கான
அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

1 ஆம் பரிசு: - D.V.D (Digital) Player - 1749
குகன் தேநீர்ச்சாலை
உரும்பிராய் சந்தி.

2 ஆம் பரிசு: - மின்விசிறி - 2917
கோ.செல்வராசா
குளப்பிட்டி லேன், கொக்குவில்.

3 ஆம் பரிசு: - கீற்றர் - 2773
உ.வாதுசன்
உரும்பிராய் வடக்கு.
(2491)



யாழ் மாவட்ட மின்பாவனையாளர்களே!

சிந்தியுங்கள்! நன்றாக சிந்தியுங்கள்!! உங்கள் பிள்ளைகளின் கல்வி மின்வெட்டினால் பாதிப்படைவதை சிந்தியுங்கள்!!!

ஒவ்வொரு மின்பாவனையாளர்களும் 80% மின்சக்தியை சேமிக்கக்கூடிய ஒரு CFL மின்குமிழையாவது பயன்படுத்தி (400/=செலவு செய்து) பல ஆண்டுகால மாக நீடித்த மின்வெட்டை புதுவருடப்பிறப்புக்குள் இல்லாது செய்யுங்கள்.

குறிப்பு:- அரசநிறுவனங்கள்,வங்கிகள், பாடசாலைகள், அரசசார்பற்ற நிறுவனங்களுக்குஅதிகூடிய கழிவு விலையில் 20 மாத உத்தரவாதத்துடன் மானிப்பாயில் உள்ள சுந்தர்சன் நிறுவனத்தில் CFL மின்குமிழ்களை 1மாத கடன் அடிப்படையில் பெற்றுக்கொள்ளலாம். 56/15, ஸ்ரான்லி வீதியில் உள்ள NEW ASIAN CENTER ல் பெற்றுக்கொள்ளலாம்.

நிர்வாகி: Jaffna Technical Institute
45, Clock Tower Road, Jaffna.
021 222 6434, 0718561654


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.04.2009இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.